மலர்-5 இதழ்-128 டிசம்பர் 16-31 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்





# ஸ்ரீரங்கமும் அர்த்தபஞ்சகமும்

ஸ்ரீரங்கம் கோவில் தாயார் சந்நதிக்கு வெளியே ஐந்து குழி மூன்று வாசல் இருக்கும்.

இந்த ஐந்து குழி அர்த்தபஞ்சக ஞானத்தைக் குறிப்பதாகும். மூன்று வாசல் தத்வத்ரயத்தைக் குறிப்பதாகும். தத்வத்ரயம் என்பது சித், அசித், ஈஸ்வர தத்துவம். அர்த்தபஞ்சகம் என்பது

| | |
|---|---|
| 1. | அடையப்படும் பிரம்மம் |
| 2. | அடையும் ஜீவன் |
| 3. | அடையும் வழி |
| 4. | அடைவதால் ஏற்படும் பயன் |
| 5. | அடைவதற்கு உள்ள தடைகள் |



ஆகியவற்றைக் குறிக்கும்.

இந்த ஐந்து குழிகளில் ஐந்து விரல்களை வைத்துத் தெற்குப் பக்கம் பார்த்தால் பரமபதவாசல் தெரியும். ஒரு ஜீவாத்மா, பரமாத்மாவை இந்தத் தத்துவங்களைக் கொண்டு அடைந்தால் அந்த ஜீவாத்மாவுக்குப் பரமபதம் நிச்சயம் என்பது இதன் பொருள்.

# காலையில் அஷ்டலட்சுமி பெயரை உச்சரித்தால் செல்வவளம் பெருகும்

அதிகாலையில் பெண்கள் வீட்டுக் கதவைத் திறக்கும்போது அஷ்ட லட்சுமிகள் பெயரை சொல்லவேண்டும். அவ்வாறு அஷ்ட லட்சுமிகள் பெயரை உச்சரித்துக்கொண்டு கதவை திறக்கும் போது, அஷ்ட லட்சுமிகளும் அந்த வீட்டில் குடியேறி ஏராளமான செல்வத்தை வழங்குவர்.

அதனால், அந்த வீட்டில் பணப்பற்றாக்குறை, பணக்கஷ்டம் போன்றவை வராது. அதேபோல், அலுவலகம், தொழிற் நிறுவனங்கள் என எந்த இடமாக இருப்பினும் முதன்முதலாக அதன் கதவைத் திறக்கும்போது அஷ்ட லட்சுமிகள் பெயரை சொல்லிக்கொண்டே திறப்பது மிகவும் நன்மை பயக்கும்.





# பஞ்சகவ்ய விளக்கின் பயன்கள்

1. பசும்பால், தயிர், சாணம், பசு நெய் மற்றும் கோமியத்தினால் கலந்து தயாரிக்கப்பட்டது நவசக்தி பஞ்சகவ்ய விளக்கு.
2. கோயில் மற்றும் வீட்டிலும் ஏற்றலாம்.
3. இயற்கையான பஞ்சகவ்ய விளக்கு ஏற்றுவதின் மூலம் நல்ல நேர்மறையான சூழ்நிலை உருவாகும், தீமைகள் விலகும்.
4. யாகம் செய்த பலன் கிடைக்கும்.
5. பஞ்சகவ்ய விளக்கில் தீபம் ஏற்றும் போது அதிலிருந்து வரும் புகையின் மணம் ஹோமத்திலிருந்து வரும் வாசனைக்கு நிகரானது.
6. லட்சுமி கடாட்சம் உண்டாகும்.
7. நினைத்த காரியங்கள் கைகூடும்

# குழந்தைப்பேறு செல்வ செழிப்பு வழங்கி மனப் பிரச்சனைகளை தீர்க்கும்

# திருவோண விரதம்




திருவோண விரதம் என்பது, திருவோணநட்சத்திரத்தோடு கூடிய நாளில் கடைபிடிக்க வேண்டிய விரதமாகும். இது பெருமாளுக்கு உகந்தது. இந்த நாளில் பெருமாளை வழிபாடு செய்தால் சுபிட்சம் உண்டாகும் என்பது நம்பிக்கையாகும்.

ராசி மண்டலத்தில் 27 நட்சத்திரங்கள் உள்ளன. இதில் பெருமாளுக்குரிய திருவோணமும், சிவனுக்குரிய திருவாதிரையும் மட்டுமே திரு என்ற சிறப்பு அடைமொழியுடன் கூடியது.

தசாவதாரங்களில் வாமன அவதாரம்எடுத்த பெருமாள், மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்ட நிகழ்வு, திருவோண நட்சத்திரத்தன்று தான் நிகழ்ந்ததாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

திருவோண விரதம் மேற்கொள்பவர்களின் வாழ்வில் கஷ்டங்கள் நீங்கி செல்வ செழிப்பு ஏற்படும். மனக்குறைகள் அகன்று சந்தோஷமான வாழ்க்கை அமையும்.

மேலும், திருமணத்தடை உள்ளவர்கள் இந்த விரதத்தை மேற்கொண்டால் விரைவில் நல்ல வரன் அமையும்.

அதுமட்டுமின்றி குழந்தை இல்லாதவர்கள் இந்த விரதத்தை மேற்கொண்டால் குழந்தைப்பேறு கிடைக்கும் மற்றும் செல்வம் நிலைத்து நிற்கும் என்பது நம்பிக்கையாகும்.

மாதந்தோறும் திருவோண நாளில் திருமாலை வழிபட்டு விரதம் இருந்தால், சீர் குலைந்த மனம் சீராகும்.

உறவினர்களுக்கிடையேஏற்பட்ட பகை அகலும். துன்பங்கள் அனைத்தும் நீங்கி நன்மைகள் உண்டாகும்.

திருவோண விரதம் இருக்கும் பக்தர்கள் பெருமாளை வணங்கி துதிப்பாடல்கள் பாட வேண்டும்.

விரதம் இருக்க முடியாதவர்கள் அருகில் உள்ள பெருமாள் கோவிலுக்கு சென்று வழிபட வேண்டும்.

மேலும், இன்று வீட்டில் நெய் விளக்கேற்றி வழிபடுவது சிறப்பான பலன்களை தரும்.



அழகுராஜா

திருவோண நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், சந்திர திசை நடப்பவர்கள் பெருமாளை தரிசித்து வணங்குவது சிறப்பாகும்.

திருவோண நட்சத்திரத்தன்று விரதம் இருப்பதால் கல்விச் செல்வம் மற்றும் பொருட் செல்வம் அனைத்தும் உங்களுக்கு கிடைக்கும்.

இவ்வளவு சிறப்புகள் வாய்ந்த திருவோண நட்சத்திரத்தன்று சுண்டலை பிரசாதமாக பெருமாளுக்கு படைத்தால் துன்பங்கள் அனைத்தும் நீங்கி இன்பங்கள் பெருகும்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

## பாவம் போக்கி, செல்வ வளம் பெருக்கும்

# மூன்றாம் பிறை தரிசனம்

அமாவசையை அடுத்து வரும் மூன்றாம் நாளில் வானில் தோன்றும் நிலவினை தரிசிப்பதைத்தான் மூன்றாம் பிறை தரிசனம் என்பார்கள். இதை 'பிறை காணுதல்' என்றும் முன்னோர் அழைத்துள்ளனர். பஞ்சாங்கத்திலும், காலண்டரிலும் மூன்றாம் பிறையை மக்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக 'சந்திர தரிசனம்' என்று குறிப்பிட்டுள்ளது.

சிவன், பார்வதி, விநாயகருக்கு மூன்றாம் பிறை நிலவே தெய்வீக சின்னமாக வைத்துள்ளனர். காமம், வெகுளி, மயக்கம் இந்த மூன்று குணங்களையும் கடந்தவன் முக்தி அடையலாம் என்பதை நினைவுபடுத்துவதற்கே முன்னோர்கள் இந்த மூன்றாம் பிறை தரிசனத்தை காணவேண்டும் என்று கூறினார்கள்.

**மூன்றாம் பிறை கதை:**

ஒரு முறை தட்சனின் சாபத்தால், தனது பதினாறு கலைகளையும் இழந்தான்சந்திரன். தனது கலைகளை மீண்டும் பெறுவதற்காக சந்திரன் சிவனை நினைத்து தியானம் செய்தார். தட்சனின் சாபத்தால் உருகும் சந்திர பகவானின் தேக நிலை குறித்து மிகவும் வருத்தம் அடைந்தனர் அவரின் இருபத்தேழு மனைவியர்.



www.aanmeegamalar.com

உடனே தங்களின் தந்தையான தட்சனிடம் சென்று சாப விமோசனம் அளிக்கும்படி வேண்டினர்.

தட்சனோ தனது அறியாமையால், அளித்த சாபத்தால் தனது புண்ணியம் அனைத்தும் குறைந்துவிட்டது என்றும், தன்னால் சாப விமோசனம் அளிக்க முடியாது என்றும் கூறினார். இறுதியில் 27 நட்சத்திர மனைவியரும், சந்திரனுடன் சென்று சிவ பெருமானை நினைத்து தவம்புரிந்தனர். சந்திரனின் தவத்தை மெச்சிய சிவபெருமான் 'மூன்றாம் பிறையாக' சந்திரனை தன் தலைமுடியில் அமர்த்திக் கொண்டு, சந்திரனுக்கு சாப விமோசனம் கொடுத்தார்.

சிவனின் தலையில் சந்திரன் அமர்ந்ததும் சுறுசுறுப்போடு அதேநேரம் சிறுகச் சிறுக வளர்ந் தால் முழுப்பலனையும் அடைந்த சந்திரன் சாப விமோசனம் அடைந்தார்.

## பலன்கள்:

மூன்றாம்பிறை தரிசனம் காண்பவர்களுக்கு ஞாபக சக்தி அதிகரிக்கும். மனக்குழப்பம் நீங் கும். கண் பார்வை தெளிவாகும். செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் வரும் மூன் றாம் பிறை மிகவும் விசேஷமான ஒன்றாகும்.

குறிப்பாக சித்திரை, வைகாசி மாதங்களில் வரும் இப்பிறையைக் கண்டால் ஓர் ஆண்டு சந்திர தரிசனம் செய்த பலன் கிடைக்கும். கார்த்திகை, மார்கழி மாதங்களில் வரும் மூன்றாம் பிறையைக் கண்டால் சகல பாவங்களும் தீரும்.

## நான்காம் பிறையை ஏன் பார்க்கக் கூடாது?

ஒரு முறை விநாயகப்பெருமான் சந்திரலோகத்துக்கு விஜயம்செய் தார். கையில் கொழுக்கட்டை யுடன் வந்திருந்த விநாயகரைக் கண்டு ஏளனம் செய்த சந்திரன் மீது விநாயகர் மிகுந்த கோபம் அடைந்தார். அன்று பிள்ளையார் சதுர்த்தி வேறு. கோபமுற்ற கணபதி, 'சதுர்த்தியில் உன்னைப் பார்ப்பவர்கள் வீண்பழிக்கு ஆளாவார்கள்!' என்று சபித்தார்.




மனம் வருந்திய சந்திரனோ, தான் அறியாது செய்த தவற்றை மன்னித்து சாப விமோசனம் தரும்படி கேட்டுக்கொண்டான். விநாயகர் சந்திரனை மன்னித்தார், ஆனால், மூன்றாம் பிறையைப் பார்ப்பவர்களுக்கு மட்டும் முழு மகிழ்ச்சி பொங்கும் என்று அருளினார்.

## நான்காம் பிறையைப் பார்த்ததால் வரும் கெடு பலனை எப்படித் தவிர்க்கலாம்?

இதற்கும் புராண காலத்தில் கிடைத்த ஒரு தீர்வைப் பார்ப்போம். ஒருமுறை சதுர்த்தியில் வரும் நான்காம் பிறையைப் பார்த்து வீண்பழிக்கு ஆளானார் கண்ணன். இதற்குப் பரிகாரமாக, அடுத்த திங்களில் (அடுத்த மாதத்தில்) அமாவாசையைஅடுத்து வரும்மூன்றாம்நாளில் சந்திர தரிசனம் செய்த தோடு கணபதியையும் வேண்டி பழியில் இருந்துவிடுபட்டார்.


கீதா-ராஜன்

காலை வேளை பிரம்ம முகூர்த்தமாகும். மாலை வேளை விஷ்ணு முகூர்த்தமாகும்.

எனவே, அந்த வேளையில் சந்திர தரிசனம் செய்து, வீட் டில் விளக்கேற்றி வழி பட்டால் செல்வம் பெருகும்.

திருமணம் ஆனவர்கள் தம்பதி சமேதரராக சந்திர தரிசனம் செய்யலாம். திருமணம் ஆகாத வர்கள் பெற்றோருடன் சேர்ந்து மூன்றாம் பிறை யை தரிசிக்கலாம். இதனால் குடும்ப ஒற்றுமை பெருகும்.

## 80 பிறை கண்டவரை தரிசித்தாலும் பலன்...

சந்திரனை தலையில் சூடிய சிவனை வழிபடுவ தோடு மட்டுமின்றி, ஆயிரம் பிறை கண்டவர்களை சிறப்பிக்கும் விதமாக நமது முன்னோர்கள் சதாபிஷேகம் செய்து அவர்களையும் வழிபட்டுள் ளனர், ஒருவர் ஆயிரம் பிறையைக் காண 80 வயதைபூர்த்தி செய்திருந்தால்தான் அவர் ஆயிரம் பிறையை கண்டவராவார்.

இதுபோன்ற சதாபிஷேகத்தில் கலந்து கொண்டு அவரின் ஆசியை பெற்றாலும் சந்திர தோஷம் நீங்கும்.

– கீதாராஜன்


தொடர்பு எண்: 9444228203

# விரைவில் வெளிவருகிறது...




## அற்புதமான தகவல்களுடன்,

## ஒவ்வொரு மாதத்தின் சிறப்புகள்,
## ஒவ்வொரு வாரத்தின் முக்கிய நிகழ்வுகள்,
## மாதம் உருவான விதம் போன்ற அனைத்து
## தகவல்களையும் தாங்கி பொக்கிஷமாக
## வெளிவருகிறது
## ஆன்மிகமலர்.காம் மாத காலண்டர்

மேலும் தகவல்களுக்கு: 9444228203/9994162182




# தர்மம் வேறு தானம் வேறு

# சாஸ்திரம் கூறும் விளக்கம்

தர்மம் தலை காக்கும் என்று நமது முன்னோர் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் இந்த தர்மத்திலும் ஒரு சிறு வேறுபாடு உள்ளது. கொடுப்பது அனைத்தும் தர்மம் என்று எண்ணக் கூடாது, இதில் இரண்டுவித பொருள் உள்ளது.

ஒன்றுதர்மம், இன்னொன்று தானம்.

எது தர்மம்? எது தானம்? என்பது பல நேரங்களில் தெரிவதில்லை!

தர்மம் வேறு தானம் வேறு என்பதை நாம் எவ்வளவுக்கு உணர்ந்திருக்கிறோம். இதை தெளிவிக்கவே தர்ம சாஸ்த்திரம் என்று தனியாக ஒன்றை வேதபுராண இதிகாசங்களின் சாரத்தை நமக்குத் தந்திருக்கிறார்கள் நமது மூதாதையர்கள்.

**அஹிம்ஸா சத்யம் அஸ்தேயம் சௌசம் இந்திரிய நிக்ரஹ ஏதம் சாமாதிகம் தர்மம் சாதுர்வர்ணே பிரதிர் மனு:**

என்று தர்ம சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. அதாவது:

1. அஹிம்ஸை
2. சத்யம்
3. அஸ்தேயம்
4. சௌசம்
5. இந்திரிய நிக்ரஹம்

ஆகிய ஐந்து விஷயங்களையும் நியமனமாகக் கொண்ட வாழ்கையை நடத்துதலே தர்ம வாழ்க்கை. இந்த ஐந்தும் சேர்ந்ததுதான் தர்மம்.

ஆக தர்மம் என்னும் இந்த ஐந்துடன் தானத் தையும் சேர்த்த வாழ்கை ஆன்மீகத்தில் நம்மை உயர்த்தும் என்று கூறலாம்.

**1.அஹிம்ஸை:**

அஹிம்ஸை என்றால் நாம உடனே நினைக்கறது உயிர்களை துன்புறுத்தாமை உணவுக்காக கொல்லாமை போன்றவற்றை மட்டுமே. ஆனால் பிறருக்கு எந்த விதத்திலும் மன வருத்தத்தை ஏற்படுத்தாது `இருப்பதும்` அஹிம்ஸைதான்.

இந்த மாதிரி வாழ்வது சிரமம்தான் ஆனால் பழகப் பழக இதை அனுபவத்தில் கொண்டு வர முடியும். நாம் வருந்த நேரிட்டால் உடனே அதற்கு எதிர் வினையாக நாம் செய்யும் செயலே பல நேரங்களில் எதிரில் இருப்பவருக்கு ஹிம்ஸையாகிறது. ஆகவே பிரச்சனை மனவருத் தம் ஏற்படும் ஏற் படுத்தும்



என்று தோன்றுகிற உணர்கிற நேரத்தில் அமைதியாக இருப்பது அல்லது அவ்விடத் திலிருந்து விலகி இருப்பதும் அஹிம்ஸை தான்.

ஆக அஹிம்ஸையாக இருப்பது முதல் தர்மம்.

**2.சத்யம்:**

அடுத்து வருவது சத்யம். இது நமக்கு நன்றாகத் தெரிந்த ஒன்று. ஆனால் விளையாட்டுக்காக சொன்னேன் என்றும், இந்த விளையாட்டு 100 பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை நடத்துவது என்பதெல்லாம் மஹா பாபங்கள் என்பதை உணர்ந்து அதிலிருந்து விலக வேண்டும்.

எந்தக் காரணத்திலும் அசத்யமான வார்த்தைகளைப் பேச மாட்டோம் என்று இருக்க வேண்டும். ஒருவர் எதிரில் இருந்தால் ஒன்று சொல்வது இல்லையென்றால் இன்னொன்று என்பதானவைகள் அசத்யத்தில் சேரும். அவை நமக்கு பாபத்தை அதிகரிக்கும் என்கிறார்கள் பெரியோர்.

ஆக அசத்யமாக இல்லாமல் சத்யமாக இருப்பது இரண்டாவது தர்மம்.

**3.அஸ்தேயம்:**

அஸ்தேயம் என்றால் பிறன் பொருளுக்கு ஆசை கொள்ளாது இருத்தல். நம்மிடம் இல்லாத பொருளை அடுத்தவனிடத்திலிருந்து அபகரிக்க எண்ணவும் கூடாது என்கிறார்கள். அதாவது அடுத்தவன் சொத்துக்கு ஆசைப் படாமல் இருக்க வேண்டும்.

இந்த அஸ்தேயம் இல்லையென்றால் சத்யமும் அஹிம்ஸையும் நம்மால் செயல்படுத்த இயலாது. நியாயமான வழியில் கிடைப்பதை இறையின் பிரசாதமாக ஏற்று அநியாயமாக பிறருடைய பொருளுக்கு ஆசை கொள்ளாது இருப்பதுதான இந்த அஸ்தேயம் பிறன் பொருளுக்கு ஆசை கொள்ளாது இருத்தல் மூன்றாவது தர்மம்.

**4.சௌசம்:**

சௌசம் என்றால் பவித்ரம் பரிசுத்தம் என்று பொருள். உடல் பரிசுத்தம் என்பது முக்கியம்தான் அதைவிட மேலாக, மனதளவில் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதே இங்கு சொல்லப்படும் சௌசம்.

சௌசம் இருவகைப்படும் பாஹ்ய சௌசம், இதுதான் நமது உடல் தூய்மை, இன்னொன்று ஆப்யந்த்ர சௌசம் என்பதான மனதளவில் தூய்மை. அதாவது குழந்தை போன்ற, கல்மிஷமில்லாத மனதுடன் இருத்தல்.

மனதில் கல்மிஷம் இருக்கும் வரையில் மேலே சொன்ன மற்ற மூன்று விஷயங்களும் கொஞ்சம் கொஞ்சமாக நம்மை தின்றுவிடக்கூடும் என்கிறார்கள். கல்மிஷமில்லாத மனதுடன் இருத்தல் நான்காவது தர்மம்.

**5.இந்திரியநிக்ரஹம்:**

கடைசியாக வருவது இந்திரிய நிக்ரஹம். நமது பஞ்ச இந்திரியங்களது செயல்களை கட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும்.



புனிதவேல்

காஞ்னம காமினி கீர்த்தி ஆகியவை பற்றி பெரியவர்கள் சொல்லியதை எப்போதும் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த இந்திரிய நிக்ரஹம் என்பது காதால் நல்லவற்றைக் கேட்பதும், உணவுக் கட்டுப்பாடும் பிரம்மச்சரியம் பேணுதலும், கண்களால் எதை எல்லாம் காணக் கூடாது என்றும் பலவிதங்களிலும் நம்மைப் புடம் போடச் செய்வது. இதுவும் ஒரு முக்கியமான தர்மம்.

மனிதனாகப் பிறந்த எல்லோருக்கும் உண்டானவை என்று தர்ம சாஸ்திரம் சொல்கிறது.

தர்ம வழியில் செல்ல வேண்டும் இறையருளைப் பெற வேண்டும் என்று எண்ணும் எல்லோருக்கும் இவை ஐந்தும் முக்கியம். இப்படி வாழ்பவனே தார்மீக வாழ்கை வாழ்பவன் அவனே தார்மீகன்!

இப்படி வாழத் தலைபடுவோமானால் இறையனுபவம் பெறுதல் சுலபம். ஆகவே நாம் செய்யும் எல்லா காரியங்களிலும் இந்த ஐந்து தர்ம விஷயங்களையும் நினைவில் கொண்டு செயல்படுத்த முயலுவோம்..!

தொகுப்பு: புனிதவேல்

தொடர்பு எண்: 9841807572




மாதம் இரண்டு முறை வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்




## மிகப் பழுமையான சிவன் கோவில்

# கீழவலம் திருவாலீஸ்வரர் திரிபுரசுந்தரி அம்மன் ஆலயம்

திருக்கழுக்குன்றம் மதுராந்தகம் சாலையில் சுமார் 18 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது கீழவலம் கிராமம். ஊரின் ஆரம்பத்திலேயே இங்கிருந்து செல்லும் சமயம் இடதுகை பக்கம் அமைந்துள்ளது இந்த ஆலயம். கோயிலுக்கு மதிலாக முன்பு இருந்த பழைய சுவர் விழுந்துவிடவே புதிய சுவர் கட்டுவதற்கு பில்லர் போட்டு வைத்துள்ளார்கள். இன்னும் சுற்று சுவர் எழுப்பவில்லை. தெற்கு பக்கம் பார்த்த வாசல் அமைந்துள்ளது. ஆலயத்தின் வாசலை பார்த்த வாறு திரிபுரசுந்தரி அம்மன் நமக்கு காட்சியளிக்கின்றார். கிழக்கு பக்கம் பார்த்தவாறு இறைவன் காட்சியளிக்கின்றார். இறைவன் பெயர் திருவாலீஸ்வரர். நீண்ட கருவறை வாசல். கருவறை சதுர அமைப்பில் உள்ளது. இறைவனுக்கு எதிரில் வாசல் இல்லை.சிறிய துவாரம் மட்டும் உள்ளது. வெளியில் நந்தியும் பலிபீடமும் அமைந்துள்ளது. வெளிபுற கருவறை சுற்று சுவரில் கோஷ்டத்தில்





வேலன்

தட்சிணாமூர்த்தி சிலை மட்டும்உள்ளது. பிற சிலைகள் உள்ள இடத்தில் இடம் காலியாக உள்ளது. சிலைகளை கோயிலின் உள்ள பிரதிஷ்டை செய்வதற்காக வைத்துள்ளார்கள்.

வினாயகருக்கு தனி மண்டபம் –முருகனுக்கு தனி மண்டபமும் அமைத்துள்ளார்கள். கருவறையின் பின்புறம் லிங்கம் புதையுண்ட நிலை யில் உள்ளது. ருத்ரபாகம் மட்டும் நமக்கு தெரிகின்றது. கோயிலுக்கு வெளியெ தனியே லட்சுமிக்கு கோயில் கட்டியுள்ளார்கள்.எதிலும் சிலைகள் இல்லை..கோயிலுக்கு உள்ளே நந்திக்கு அருகில் சிறிய கிணறு அமைந்துள்ளது. தென்பகுதியில் கோயில் மானியம் எனப்படும் நிலத்தில் பல்லவர்காலம் கொற்றவை புடைப்புச்சிற்பம்காணப்படுகின்றது வெளியில் பார்ப்பதற்கு புதிய கோயிலாக தோற்றமளித்தாலும் உள்ளே கட்டிடங்கள் பழுதடைந்து உள்ளது.

சம்பந்தபட்ட நிர்வாகத்தினர் மற்றும் ஊர்பொதுமக்கள் சேர்ந்து கோயிலினை புதுப்பிக்க பக்தர்கள் வேண்டுகொள்விடுத்துள்ளனர். ஆலயதொடர்புக்கு: 9443521482, 9443204773, 9025226787

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.









● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்

புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்











# ஸ்ரீரங்கம் கோவிலும் ‘விஷ்வரூப’ பூஜையும்

ஸ்ரீரங்கத்தில் காலை முதல் நேர பூஜை மகத்தானது. இந்த பூஜையை ‘விஷ்வரூபம்’ என்றழைப்பார்கள். இந்த விஷ்வரூபம் என்பது ஸ்ரீரங்கத்திற்கே உரித்தான ஒரு தனி வழிப்பாட்டு முறையாகும்.

‘விஷ்வம்’ என்றால் ‘பெரிய’ என்றும் ஒரு பொருள் உண்டு.

‘ரூபம்’ என்றால் உருவம்.

இங்கு உறையும் பெருமாளுக்கே பெரிய பெருமாள் என்றுதான் திருநாமம். பெரியபெருமாள் காலை உறங்கியெழும் இந்த வேளைக்கு விஸ்வ ரூபம் என்று பெயர் வைத்துள்ளனர்.

மேலும் இந்தப் பெயர் ஏற்பட ஒரு காரணம் உண்டு.

108 திவ்யதேசங்களில் உள்ள அனைத்து பெருமாளும் முதல் நாள் இரவு இங்கு வந்து அரங்கனிடத்து ஒடுங்கி, ஒன்றாகி அடுத்த நாள் காலை அவரவர் தம் வீற்றிருந்த ஸ்தலத்தில் எழுந்தருளிவிடுவார்கள்.

அனைத்து திவ்யதேச எம்பெருமான்களும் ஒன்றாகி சேவை சாதிக்கும் இந்த நேரம் மிகப் பெரிய மகத்துவம் பொருந்திய சேவையாக போற் றப்படுகிறது.

அதனால்தான் இந்த தரிசனம் ‘விஸ்வரூப தரிசனம்’!

தேசிகர் தமது பாதுகாஸஹஸ்ரம் வைதாளிகப் பத்ததியில் (242 சுலோகம்) இந்த திருப்பள்ளி யெழுச்சியின் போது சிவன், நான்முகன், ஸநகர் ஆகியோர் அரங்கனது வாயிலில் இந்த விஸ்வரூப ரங்கனைக் காண்பதற்காக, தரிசிப்பதற்காக காத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று குறிப் பிட்டு, உன் திருவடிகளினால் சுகம் பெற்று கொண்டிருக்கும், சக்ரவர்த்தினியாய் விளங்கும் பாதுகையை நீ சாற்றிக் கொண்டு எழுந்தருள வேண்டும் என்று பிரார்த்திக்கின்றார்.

இதனால்தானே என்னவோ? ஆகம




ரீதியாகவும், காவேரியினின்று யானையின் மேல் புனித நீர் கொண்டு வந்தவுடன், அந்த நீர் கொண்டு அர்ச்சகர்களால் முதலில் பாதுகைக்குத் திருமஞ்சனம் செய்விக்கப்படுகின்றது. இதற்கு ‘திருவடி விளக்குதல்” என்று பெயர்.

ஸ்வாமி தேசிகர் சொன்னது போல் அரங்கன் அதனைச் சாற்றிக் கொள்ளும் முன் முதலில் தன்னை கங்கையிற் புனிதமான காவிரி நன்னீரால் ஸ்நானம் பண்ணிக் கொள்கின்றது.

அரங்கன் கண் விழித்தலுக்கு முன் வீணை இசைக்கப்படுகின்றது. காவிரி நன்னீர் வந்தவுடன் பசுமாடு பின்பக்கமாய் திரும்பி நிற்க வைக்கபபடுகின்றது.

யானை அந்த பரந்தாமனை நோக்கிய வண்ணம் தயாராய் நிற்கின்றது. பசுமாட்டின் வால்பக்கம் மஹாலக்ஷ்மி வாஸம் செய்கின்றாள்.

யானையின் முகத்தில் வாஸம் செய்கின்றாள். பகவான் மஹாலக்ஷ்மியினை கடாக்ஷித்தவாறு திருக்கண்ணை மெதுவே திறக்கின்றான். இந்த அழகினை ரசிக்கின்றார் தேசிகர்.

பத்மா ஜுஷ்டம் பஜது சரணம்
பாதுகா லப்தவாரா
ப்ரத்யாஸந்தா தவ பரிஜநா
ப்ராதரஸ்தாந யோக்ய
அர்த்த உந்மேஷாத் அதிக சுபகாம்
அர்த்த நித்ராநுஷங்காம்
நாபீ பத்மே தவ நயநயோ நாத
பஸ்யந்து ஸோபாம் ||

பொருள்:

ஸ்ரீரங்கநாதா! காலைவேளையில் உனக்கு தொண்டு புரியும் கைங்கர்யபரர்கள் வந்து விட்டனர்.

உனது தாமரைப் போன்ற கண்களில் உள்ள உறக்கம் பாதி கலைந்தும், கலையாமலும் உள்ளதால், உனது இமை பாதி மூடியும், திறந்தும் உள்ளது.

இந்த அழகைக் கண்டு நாபி கமலத்தில் உள்ள தாமரை மலர் உனது கண்கள் போலவே மலர்ந்தும் மலராமலும் உள்ளது. இந்த அழகை அவர்கள் அனுபவிக்க வேண்டும். உனது திருவடியினை வணங்கி வருடிய மஹாலக்ஷ்மியின் சேவையினை இனிப் பகலில் பாதுகை ஏற்றுக் கொள்ள வேண்டும்.



# செல்வ விநாயகர் திருக்கோயில் கும்பாபிஷேகம்




கோயம்புத்தூர் பயனியர் பெர்டிலைசர்ஸ் பிரைவேட் லிமிடெட் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள செல்வ விநாயகர் திருக்கோயிலில் நவம்பர் 29ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதற்கு முந்தைய நாளான நவம்பர் 28ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மங்கள இசையுடன் நிகழ்ச்சி தொடங்கியது.

தொடர்ந்து கணபதி ஹோமம், புண்யாஹ வச்சனம், வாஸ்து சாந்தி, மிருதசங்கரஹணம், கும்ப ஸ்தாபனம், யாகசாலை பிரவேசம், யாக சாலை பூஜைகள், மற்றும் 108 திரவிய யாகம். மேலும், பூர்ணாஹ்ருதி தீபாராதனை, வைப்பது ஸ்ரீ ஸ்ரீ செல்வ விநாயகர் பீடத்தில், அஷ்டபந்தனம் மருந்து பூசுதல் நடைபெற்றது.

மகா கும்பாபிஷேக நாளான நவம்பர் 29. 2021 திங்கட்கிழமை தொடங்கியது. மங்கள இசை, மண்டபார்ச்சனை, வேதிகார்ச்சனை, நாடி சந்தானம், ஸ்பர்சத்துடன் ஹ்ருதி, மஹா பூர்ணாஹ்ருதி, உபசாரம், மகா தீபாராதனை, யாத்ராதானம். இல் விமான கலசத்திற்கு மகர லக்னம், மகா கும்பாபிஷேகம் நடந்தது.

இதைத்தொடர்ந்து, ஸ்ரீசெல்வ விநாயகருக்கு தசாதானம், தரிசனம், மகாமகம் நடந்தது

அபிஷேகம், ராஜ அலங்காரம், உபசாரம், மகா தீபாராதனை மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் நிர்வாக இயக்குனர் வித்யா பிரகாஷ், இயக்குனர்கள் ஸ்ரீமதி சித்ரா வித்யாபிரகாஷ், ஸ்ரீ வி. ரவிச்சந்திரன், முழு நேர இயக்குனர் ஸ்ரீ அர்ஜுன் பிரகாஷ் மற்றும் குடும்பத்தினர், கிருஷ்ணமூர்த்தி, தலைவர் குமரன் மில்ஸ், வி.பி. கந்தவேல், தலைவர், முத்துகவுண்டன்புதூர், நிறுவன அதிகாரிகள், கோயம்புத்தூர் பயனியர் பெர்டிலைசர்ஸ் பிரைவேட் லிமிடெட், EFFICA ஆட்டோமேஷன் GRD-CPF மெட்ரிகுலேஷன் Hr Sec.Scho பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



எஸ்.வெங்கடேசன்

– எஸ்.வெங்கடேசன், நொய்டா
தொடர்பு எண் போன்:
9811161370

## பிரச்சனைகளைத் தீர்க்கும் விநாயகர்

- சங்கடஹரசதுர்த்தியில் விநாயகருக்கு அருகம் புல் மாலை சாற்றி, அர்ச்சனை செய்து வழிபட, சங்கடங்கள் தீரும். சங்கடஹர சதுர்த்தியில் விநாயகருக்கு எருக்கம் திரி போட்டு விளக்கு ஏற்றி வழிபடபிள்ளைகள் கல்வி யில் முன்னேறுவார்கள்.
- இரட்டைப் பிள்ளையாருக்கு ரோகிணி நட்சத்திரத்தன்று சந்தனக் காப்பு செய்து வழிபடகடன் பிரச்சனை தீரும்.
- விபத்துகளில் இருந்து தப்பிக்க அவிட்ட நட்சத்திரத்தன்று முருகனுக்கு வேலில் எலுமிச்சை சொருகி அர்ச்சனை செய்யவும்.



# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக
வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும்
பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட இமெயில் முகவரிக்கு
உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

aanmeegamalar@gmail.com

# கனவில் வரும் மாயை போன்றது வாழ்க்கை

## சாங்கிய யோகத்தில் கிருஷ்ணன் கூறும் தத்துவம்




**இந்த உயிர் என்பது பிறப்பதற்கு முன்னால் தென்படுவதில்லை. இறந்த பின்னரும் தென் படுவதில்லை. இடைப்பட்ட காலத்தில் மட்டுமே தென்படுகிறது. அப்படி இருக்கும்போது இந்த இடைபட்ட காலகட்டத்தில் மட்டும் ஏன் அதனை நினைத்து வருந்த வேண்டும்?**

தூங்கும் போது கனவில் தோன்றும் உருவம் தூக்கம் கலைந்ததும் போய் விடும். கனவிற்கு முன்பும் அந்த உருவம் இல்லை. கனவிற்கு பின்பும் அந்த உருவம் இல்லை.

தூங்கும் காலத்தில் மட்டும் ஒருவிதமான மாயையில் அந்த உருவம் தெரியும்.

அது போலவே இந்த உலகத்தில் பார்க்கும் உறவினர்கள் நண்பர்கள் மற்றும் உயிரினங்கள் அனைவரும் பிறப்பதற்கு முன்பாக பார்க்க முடியாதவர்களாகவும் அறிந்து கொள்ள முடியாதவர்களாகவும் இருந்துள்ளார்கள்.

அவர்கள் வாழ்வதற்கு உரிய காலம் வந்ததும் அவர்களுக்கு உடல் மற்றும் அவற்றிற்கான உறுப்புகள் அனைத்தும் தோன்றுகிறது.

வாழும் காலம் முடிந்ததும் அவர்களின் உடல் அவற்றின் உறுப்புகள் அனைத்தும் அழிந்து போகிறது. அதன் பிறகு அவர்களை பார்க்க முடியாது.

இடைப்பட்ட காலத்தில் அவர்கள் வாழும் வாழ்க்கை கனவில் வரும் மாயை போன்றது. இவர்களை நினைத்து நீ வருந்த வேண்டியதில்லை என்று அர்ஜுனனுக்கு கிருஷ்ணர் உபதேசம் செய்கிறார்.

# சுப்ரபாதம் பாடுவதின் சுவாரஸ்ய வரலாறு

ஒருமுறை விஸ்வாமித்திரரின்யாகத் தினை காக்க சென்ற போது, கங்கைக் கரையில், ராம லட்சுமணர்கள் தங் களை மறந்து தூங்கிக் கொண்டிருந் தனர்.

அவர்கள் ராஜகுமாரர்களாயிற்றே, அரண்மனையில் சுகபோகமாய்




இருந்தவர்கள் காடு மலைகளில் அலைந்து திரிந்ததால் வந்த களைப்பு. அதனால் நேரம் போவதைப் பற்றிக்கூட கவலைப்படாமல் உறங் கிக் கொண்டிருந்தனர்.

அவர்களை அழைத்துக் கொண்டு வந்த விஸ்வாமித்திரர், அதிகாலைப் பொழுதில் எழுந்து, கங்கையில் நீராடி, ஜப தபங்களையெல்லாம் முடித்துவிட்டு, ராம லட்சுணர்களை எழுப்புகிறார். நாலரை மணிக்கு எழுப்பத் தொடங்கியவர், ஆறரை மணி வரைக்கும் எழுப்பிக் கொண்டே இருக்கிறாராம்! ம்ஹூம். இரண்டு பேரும் எழுந்திருக்கவே இல்லை.

உடனே, 'கௌசல்யா சுப்ரஜா. கௌசல்யா சுப்ரஜா.' என்று சொல்லிக் கொண்டே எழுப்பி னாராம்.

இன்று ஒருநாள், இந்த தெய்வக் குழந்தையை எழுப்பும் பேற்றினை நான் பெற்றேன். ஆனால், தினமும் இவனை எழுப்பும் பேற்றினை ராமனை பெற்ற கோசலை என்னும் கௌசல்யா எத்தனை அரிய பேற்றினை பெற்றவள்.

அதனால் அவளை தொழுதவாறு ராமனை இவ்வாறு எழுப்புகிறார்....

கோசலையின் தவ புதல்வா! ராமா!
கிழக்கில் விடியல் வருகின்றதே!
எழுந்திட்டு புலி போல் மனிதா
செய்திடுவாய் இறைகடமை!

இந்த கௌசல்யா சுப்ரஜான்ற வால்மீகியின் வார்த்தை யினை கொண்டே பிரதிவாதிபயங்கரம் அண் ணங்காச்சாரி என்பவர் எழுதினார்.

அவர் எழுதிய அந்த பாடல்களே இன்னிக்குதிருப்பதியில்எம்.எஸ். சுப்புலட்சுமி குரலில் திருப்பள்ளி யெழுச்சி பாடலாய் ஒலிக்கிறது.

எல்லாம் சரி, ராமனை எழுப்பி யாச்சு. லட்சுமணனும் தான் தூங்கிட்டு இருக்கான். ஏன் லட்சும ணனை எழுப்ப லைன்னு இதை படிக்குறவங்களுக்கு கேள்வி எழும்பும்.

ஏனென்றால் லட்சுமணன் ஆதிசேஷன் அம்சம். விஷ்ணுவின் படுக்கை. படுக்கையை யாரும் எழுப்ப மாட்டாங்க. எழுப்பவும் முடியாது. அதனால் தான் லட்சுமணனை இதில் சேர்க்கலை.

பகவான் ஸ்ரீராமபிரானை எழுப்புவதற்கு, 'கௌசல்யா சுப்ரஜா' என ஏன் சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும்?

என்ன அர்த்தம் இதற்கு?...

அதாவது, 'இப்பேர்ப்பட்ட மகிமை மிக்க ராம பிரானைப் பெற்றெடுத்த கௌசல்யையே! நீ என்ன விரதம் மேற்கொண்டு, இந்த வரத்தை பெற்றாயோ.' என்று ஸ்ரீராம பிரானின் புகழை மறை முகமாகச் சொல்லிவிட்டு, அவனுடைய தாயாரை வாயார, மனதாரப் புகழ்கிறார் விஸ்வாமித்திரர்.




# பக்தர்களின் எண்ணப்படியே அருளும் சிவபெருமான்

அன்பர் உள்ளப்படியே அருளும் சிவபெருமான், அவரவர் எண்ணத்திற்கேற்ப வெளிப்பட்டு, அருளுவதில் வல்லவர் ஆவார். அவ்வாறு ஈசன் உறைகின்ற கடற்கரைப் பட்டிணமாகத் திகழும் அற்புதத் தலம்தான் அதிராமபட்டிணம் ஸ்ரீ சுந்தரநாயகி உடனுறை ஸ்ரீ அபயவரதேஸ்வரர் திருக்கோயில்.

ஆதிநாயகனான ஆடல்வல்லப்பெருமான்,ஆதிரை நட்சத்திரத்திலே தனது அரூப வடிவத்தை விடுத்து, சக மனித வடிவிலே அர்ச்சாரூபியாய் வெளிப்பட்டு அருளினார். அந்த வடிவமே நடராஜப் பெருமானது திவ்வியத் திருவடிவமாகும். அத்தினமே "ஆருத்ரா" எனப்படும் ஆதிரைத் திருநாளாகும்.

இந்த அற்புதமான திருவாதிரை நட்சத்திரத்திலே சிவனார், சேந்தனாரின் திருக்கலிய முதினை ஏற்று மகிழ்ந்தார். அதோடு, பதஞ்சலி வியாக்கிரபாதருக்கும் தனது திருநடன காட்சியினைக் காட்டியருளினார். திருமாலின் பெரிய திருவடியெனப் போற்றப்படும் கருடன் அவதரித்ததும் இந்தத் திருவாதிரை திருநாளில் தான்...!

இருபத்தியேழு நட்சத்திர உலகங்களுக்கும், பூமிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நட்சத்திரங்கள் பூமி ஜீவன்கள் என மூன்றிற்க்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதாக சித்தர்கள் விளக்குகின்றனர்.

அந்தந்த நட்சத்திர தேவதைகள் இப்பூவுலகில் நீராடிய தீர்த்தங்கள், வழிபட்டத் தலங்களை அறிந்து, ஸ்நானம் செய்வதும், வழிபடுவதும், வாழ்வில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படும் துன்பங்கள் அனைத்தையும் நீக்கவல்லதாகும்.

அப்படிப்பட்ட நட்சத்திரங்களின் வரிசையில் அதி உன்னதமாகத் திகழும் திருவாதிரை நட்சத்திரத்திற்கு உரிய தலமாக விளங்குகிறது இந்த அதிராமபட்டிணம்.

திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தோர், தம் வாழ்நாளில் விசேஷமாக வழிபட வேண்டிய திருத்தலமிது.

சிவனுக்கு உரிய நித்தியப் பிரதோஷ நேரத்திலும், திருவாதிரை நட்சத்திர நாளிலும், ஈசன் அபய கரத்துடன் பெருங்கருணை கொண்டு ஆருத்ரா நட்சத்திர மண்டலத்தை உலா வருவார். எனவே அசுரர்கள் இம்மண்டலத்தில் நுழைய அஞ்சுவர். தேவர்கள், அசுரர்களால் துன்புறுத்தப்படும்போது அசுரர்களால் அண்ட

முடியாத இப்புனிதமான திருவாதிரை நட்சத்திர மண்டலத்தில் தஞ்சம் புகுவர். வருடத்தில் ஒரு முறையே இந்நட்சத்திரம் பூலோகத்தை அடையும். அந்நாளே மார்கழி திருவாதிரை நாளாக, ஆருத்ரா தரிசன நாளாக மலர்கின்றது.

இரத்தினம் போல் ஜொலிக்கும் இந்த நட்சத்திரத்தின் அதிதேவதையாக ருத்ரன் (சிவன்), வெள்ளை நிறத்தில் சூலம் கத்தி மற்றும், அபய வரத ஹஸ்தத்துடன் ரிஷப வாகனத்தில் அருள்பாலிக்கின்றார். இந்த நட்சத்திரத்திற்கு உரிய மரமாக செங்காலி மரம் திகழ்கிறது.

திருவாதிரை நட்சத்திரத்திற்கு உரிய விசேஷமான இத்தலத்திலே எத்தகைய பாவங்களை புரிந்தவர்களும், பக்திபூர்வமாக திருந்திட விழைவோருக்கு அபயவரதராக ஸ்வாமி இங்கு அருள்மழை பொழிகின்றார்.

ஆதியில் "திருவாதிரைப்பட்டிணம்" என்று அழைக்கப்பெற்ற இவ்வூர், சோழவளநாட்டின் காவிரித் தென்கரையில், சுந்தரரால் வைப்புத் தலமாக பாடப்பட்ட பெருமையுடையது. சுந்தரர் தனது திருஇடையாற்று தல பதிகத்தில் இப்பதியை "திருவாதிரையான்பட்டினமூர்" என்று போற்றுகின்றார்.

அதிவீரராமன் என்னும் பாண்டிய மன்னனால் இவ்வூர் அமைக்கப்பெற்றதால் "அதிராமபட்டிணம்" என்று பின்னர் அழைக்கலாயிற்று. இம்மன்னன் இப்பகுதியை ஆட்சி செய்ததோடு, இச்சிறப்பு மிகுந்த சிவாலயத்திலும் திருப்பணிகள் பல செய்துள்ளான். இச்செய்தியை கல்வெட்டின் வாயிலாக நாம் அறியப்பெறலாம்.

பைரவ மகரிஷி மற்றும் ரைவத மகரிஷி ஆகியோர் இத்தல பெருமானை பூஜித்து, வரங்கள் பல பெற்றுள்ளனர். இன்றும் இவ்விரு மகரிஷிகளும் ஸ்தூல சூக்ஷ்ம வடிவில் இப்பதி ஈசரை வணங்குவதாக நம்பப்படுகின்றது.

நகரின் மையமாக ஆலயம் எழிலுற அமையப்பெற்றுள்ளது. முகப்பில் மூன்றுநிலை இராஜகோபுரம் நம்மை வரவேற்கிறது. உள்ளே... கிழக்கே முகம் கொண்ட மகாமண்டபம், அர்த்த மண்டபத்துடன் கூடிய ஸ்வாமி சன் னிதி. கருவறையுள் கருணையே வடிவாக அருள் பாலிக்கின்றார் ஸ்ரீ அபயவரதேஸ்வரர். நாடி வருவோருக்கு அபயமளிப்பதோடு அல்லாமல், வரங்களையும் வாரி வழங்குபவர் இந்த ஈசர்.

மகாமண்டபத்தில் தெற்கே சன்னிதி கொண்டு எழுந்தருள்கின்றாள் அம்பிகை ஸ்ரீ சுந்தரநாயகி. எளிய நகை சிந்தி, சுந்தரமாய் எழுந்து, எளியோர்க்கு எளியவளாய் அருட் பிரவாகிக்கின்றாள்.

ஏனைய கோஷ்ட மூர்த்தங்கள் முறையை


www.aanmeegamalar.com



ஆலயத்தை அழகு செய்கின்றன.

அரசுக்குச் சொந்தமான இவ் வாலயம் தினமும் காலை 6.30 மணிமுதல் 12 மணி வரையும், மாலை 4 மணிமுதல் 8.30 மணி வரையும் திறந்திருக்கும். தினசரி இரண்டு கால பூஜைகள் நடைபெறு கின்றன. கடைசியாக 2012 ஜூன் மாதம் கும்பாபிஷேகம் கண்டுள்ளது இவ்வாலயம்.



மோ.கணேஷ்

இத்தல வழிபாடு ராகு கேது தோஷம், களத்திர தோஷம், மாங் கல்ய தோஷம் போன்றவற்றை போக்கவல்ல அதியற்புத பதியாகும். இத்தல துர்க்கை மற்றும் பைரவரை வழிபட, வாழ்வில் மேன்மைகள் கூடி, மகிழ்ச்சி உண்டாகும். இங்கு வழிபட்டு, முன் ஜென்ம சாப பாபங்களை களைந்திடலாம்.

தீராத நோயால் அவதிப்படுபவர்கள், எமபயம் உள்ளவர்கள், ஆயுள் விருத்தி வேண்டுபவர்கள் இத்தலத்தில் ஆயுஷ்ய ஹோமம் மற்றும் மிருத்யுஞ்சய ஹோமம் ஆகியன செய்து பல னடைகின்றனர்.




திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவர்கள், திருவாதிரை தினம் மற்றும் திங்கட் கிழமைகளில்.. பாதாம் பருப்பு, பரங்கி, பூசணி, விளாம்பழம், சீரகம், சோளம், சீதாப்பழம், பலாப்பழம் போன்ற வற்றை ஸ்வாமிக்கு நிவே தனம் செய்து, தானம் செய்தால் சிறந்த பலனையும், முயலும் காரியத்தில் வெற்றியும் பெற்றிடலாம்.

"ஆதிரை லிங்கமாய் ஆமறை ஜோதியன்
ஆதிரை தானத்தில் அபயமென் றருளுவன்
ஆதிரை வதனழல் ஆகிடும் ஆதியில்
ஆதிருவாதிரை ஆமலர் அரணா"

...என்ற இந்தப் பாடலைப் பாடி, இத்தல நாயகர் நாயகியரை வழிபடரைவத மகரிஷியின் அருளோடு, நட்சத்திர நல்வரங்களையும் பெற் றிடலாம்.

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் இருந்து 12 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது அதிராமப்பட்டிணம். முத்துப்பேட்டை மற்றும் பட்டுக்கோட்டையிலிருந்து இங்கு வர அதிக பேருந்து வசதிகள் உள்ளன.

ஸ்ரீ அபயவரதேஸ்வரர் திருத்தாள் பணிந்து, அல்லல் களைவோம். ஆனந்தம் அடை வோம்.

ஜோதிட கலாநிதி
மோ.கணேஷ் குருக்கள்,
ஆரணி.
தொடர்பு எண்:9789156179

aanmeegamalar.com வழங்கும்

## தினம் ஒரு திருக்குறள்







ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள். aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்

# படைத்த கடவுளை உலகிற்கு காட்ட முற்படும் சைவ சித்தாந்திகள்




நேரிடையாக ஆகமம் என்ற வார்த்தைவடமொழி இலக்கணப்படி ஒன்றிலிருந்து வந்தது என்ற பொருளை சுட்டும். இதன் கருத்தாக்கம் என்ன வென்றால் ஒரே பரம்பொருளான சிவபெருமானிடம் இருந்து வந்தவைகள் ஆகமங்கள் என்பதாகும்.

இது சரியான முறையான கருத்துத் தான் என்றாலும் கூட தத்துவ நோக்கில் இந்த வார்த்தைக்கு வேறொரு பொருள் தரப்படுகிறது. ஆ என்பது பாசத்தையும், கா என்பது பசுவையும் அதாவது ஜீவன் களையும், மா என்பது பதி அல்லது இறைவனையும் குறிப்பதாகும். என்றும் சொல்லப்படுகிறது. தத்துவ நோக்கில் பார்த்தாலும் பக்தி நோக்கில் பார்த்தாலும். மனிதனை இறைவனோடு சம்மந்தப் படுத்து வதே ஆகமங்கள் என்று துணிந்து கூறலாம்.

பொதுவாக ஆகமங்கள் 28 வகை என்று கூறுகிறார்கள். இதில் 10 நேரிடையாகஇறைவன் சொன்னது என்றும், மீதமுள்ள 18 யோகிகள் உருவாக்கியது என்றும் வழி வழியாக நம்பப் படுகிறது. ஒவ்வொரு ஆகமமும், ஞான காண்டம் யோக காண்டம் கிரியா காண்டம். சரியாகாண்டம் என்று நான்கு பகுதிகளை தனக்குள் கொண்டுள்ளது. இதில் ஞான காண்டத்திலேயே மனிதனின் ஆன்மீக கேள்விகளுக்கு சரியான பதில்கள் பல தரப்பட்டுள்ளன. வேதங்களை போலவே ஆகமங்களும், காலவரையரை செய்ய முடியாத அளவிற்கு வயதில் மூத்தவைகளாகும்.

இனி சைவ சித்தாந்த ஞான பொக்கிஷமான ஆகமங்களின் கடவுளை பற்றி கூறப்பட்டிருக்கும் கருத்துக்களை எளிமையான முறையில் சிந்தித்துப் பார்த்தபோம். கடவுள் என்ற தனித் தமிழ் சொல்லி லேயே மிக பெரும் அறிவுப் பூர்வமான உண்மை

அடங்கியுள்ளது. கடவுள் என்ற தனிச் சொல் புறநானூறு தொல்காப்பியம் போன்ற மிக பழமையான தமிழ் நூல்களில் கையாளப்பட்டிருக்கிறது. கடவுள் என்ற ஒரே சொல்லுக்கு சிவபெருமானின் திரிசூலம் போல 3 கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. கடவுதல் என்றால் இயக்குதல் எனவே கடவுள் என்பது உலகத்தை இயக்குபவரை குறிப்பது முதலாவது பொருள்.




இரண்டாவது தாக கடவுள் என்பது உள்ளத்தை மனதை கடந்தவர் எனப் பொருள் கொள்ளலாம். மூன்றாவதாக கடவுள் உலகத்தை கடந்தவர். அதே நேரம் உலகின் உள்ளும் உள்ளவர். ஒவ்வொரு உயிர் உள்ளும் நிறைந்து நிலைத்து நின்று அவற்றை கடந்தும் இருப்பவன் என்றும் பொருள் கொள்ளலாம். இவைகள் சைவ சித்தாந்தம் கடவுளுக்கு சொல்லும் அறிவியல் பூர்வமான உண்மைகளாகும். கடவுள் என்ற வார்த்தையின் ஆராய்ச்சியை இம்மட்டோடு நிறுத்தி கடவுளை பற்றி சைவ சித்தாந்த கருத்துக்கள் இன்னும் என்னென்ன சொல்கிறது என்பதை பார்ப்போம்.

இந்த விஷயத்தில் சைவம் இரண்டு பிரிவுகளான கருத்துக்களை கொண்டுள்ளது. ஒன்று கடவுள் இருக்கிறார் என்பதை நிருபிப்பது மற்றொன்று கடவுளுக்குரிய குணங்களையும், இயல்புகளையும் விவரிப்பது. கடவுள் உண்டு என்பதை நிருபிக்கும் முதல் பிரிவுக்குள் மேலும் இரு பிரிவுகள் உண்டு. அவை சுபக்கம். பரவக்கம் என்ற வார்த்தைகளால் சைவ சித்தாந்திகள் குறிப்பிடுகிறார்கள். கடவுள் உண்டு என்பதை காரணங்கள் காட்டி நிருபிப்பது சுபக்கம் ஆகும். கடவுளை மறுப்பவர்களின் வாதங்களை பொருந்தாது என்று புறம் தள்ளுவது பரபக்கம் ஆகும்.

ஒரு பொருள் இருக்கிறது என்பதை நிருபித்துக் காட்ட மூன்று வழிகள் உண்டு. அவைகளை பிரமாணம், பிரதியட்சம், அனுமானம் ஆப்தவாக்கியம் என்று சொல்லலாம்.

சைவ சித்தாந்தத்தில் ஆப்த வாக்கியம் என்பதற்கு மிக முக்கிய இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனது உழைப்பால் கடவுளை அறிந்த மகான்களின் அனுபவ வாக்கியமே ஆப்த வாக்கியம் எனப்படும். இதையே சுருதி என்றும், சொல்லலாம், வேதம் ஆகமம் எல்லாமே சுருதி என்ற வட்டத்திற்குள் வந்துவிடும் என்பதாலும் தவத்தால் அனுபவத்தை நேரிடையாக பெற்ற ஞானிகளின் அமுத மொழிகளும், அவைகளுக்கு இணையானதே என்று சைவ சித்தாந்தம் கூறுவதில் மிக ஆழ்ந்த பொருள் இருக்கிறது.

வேதங்கள் என்பது எந்த ஒரு தனி மனிதனாலும் உருவாக்கப்பட்டது அல்ல. உடலை சுருக்கி உயிரை பெருக்கி ஞானக்கண்களால் தரிசிக்கப்பட்ட கருத்துக்களை உள்ளுணர்வால் வெளிப்படுத்திய பொக்கிஷங்களே வேதங்கள் ஆகும்.

அப்படி பெற்ற கருத்துக் கருவூலங்கள் வேதங்களின் சேர்க்கப்படாமல் வெளியிலேயும், உலா வரலாம். காலத்தால் மிகவும் பின்தங்கியும், அது வெளிப்பட்டு இருக்கலாம். எனவே காலங்கள் கடந்து நிற்கும் அனுபவ மொழிகளை ஏற்றுக்கொண்டு கடவுளை சந்தேகத்திற்கு இடமில்லாமல் நம்ப வேண்டும். அப்படி நம்புவதும் நம்பாமல் இருப்பதும் தனிப்பட்ட மனிதனின் சுதந்திரம் என்றாலும் கூட முன்னோர் வாக்கை புறம் தள்ளுவது அறிவுடைமை ஆகாது என்று சைவ சித்தாந்தம் நம்புகிறது.

மேலும் வேதங்களிலும் ஆகமங்களிலும் கடவுளைப்பற்றி கூறப்பட்ட விஷயங்களை நிருபித்து காட்டுவதற்கு ஞானிகள் நிச்சயம் முயன்றிருப்பார்கள். அம்முயற்சிகள் என்னவென்று சிந்திப்போம்.

கடவுள் இருப்பது உண்மை என்பதைஉலகத்தை வைத்து சைவ சித்தாந்திகள் நிருபிக்க முயன்றிருக்கிறார்கள். பானை ஒன்று இருக்கிறது என்றால் அதை செய்தவனும் இருக்க வேண்டும் அதே போன்று உலகம் இருக்கிறது. என்றால் அதை படைத்தவனும் இருந்தே ஆக வேண்டும். ஒரு பானை எப்படி தன்னைத்தானே உருவாக்கி கொள்ள முடியாதோ அதேபோலவே உலகமும், தன்னைத்தானே படைத்துக் கொள்ள முடியாது.

உலகம் தன்னைத்தான் உருவாக்கி கொள்ள வில்லை என்றாலும், அது என்றோ ஒருநாள் உருவானது அல்ல என்றுமே காலகாலமாக அது இருந்து வருகிறது. என்றும் வாதிக்கமுடியாது. காரணம் என்னவென்றால் உலகம் என்பது பல பகுதிகளால் ஆனது. பல கூறுகள் உடையஎந்த பொருளும். தானாகவே சேர்ந்து கொள்ள முடியாது.

அப்படி சேரும் என்பதற்கே எந்த அனுபவ சான்றுகளும் இல்லை. பல பகுதிகளாக கிடப்பதை ஒன்று சேர்க்க ஒரு ஆள் வேண்டும். உதாரணமாக ஒரு குடையில் துணி, இரும்பு, மரம், என்று பகுதிகள் பல உண்டு, இவற்றை

ஒருவன் தனது அறிவை பயன்படுத்தி சேர்த்தால் தான் அது குடையாகும். அதே போன்றுதான் உலகமும் பலபல பகுதிகளாக கிடக்கிறது. அதை ஒன்றுபடுத்தி உருவாக்க ஒரு சக்திவேண்டும். அந்த சக்திதான் இறைவனாகும். என்று சைவ சித்தாந்திகள் இறைவனின் இருப்பை நிலைநிறுத்த முயன்றிருக்கிறார்கள்.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

உலகம் எப்போதுமே இருந்துவரும் பொருள் என்று கொண்டால் அதற்கு அழிவு என்பது இல்லை என்பதாக கருத வேண்டும். ஆனால் நாம் அப்படி அழியாத் தன்மையோடு உலகை பார்க்க வில்லை. பூமியில் உள்ள ஒவ்வொரு துளியும், அணுவும் ஒவ்வொரு விநாடியில் மாறிக் கொண்டேயும் அழிந்துகொண்டேயும் புதிதாக உருவாகி கொண்டேயும், வருகிறது.

அழிந்தும் தோன்றியும் மாற்றம் அடைந்து கொண்டே இருக்கும் ஒரு பொருள் என்றும் நிலைத்திருந்தது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவும் சைவ சித்தாந்திகள் கருதினர்.

அதே நேரம் வேறொரு உதாரணத்தையும், அவர்கள் காட்டி கடவுளை நிருபிக்க முயன்றார்கள். ஆத்மாக்கள் பிறப்பதும். சுக துக்கங்களை அனுபவிப்பதும் அவரவரின் கர்மாவே ஆகும். என்பதை எல்லா இந்துக்களும் ஒப்புக்கொள்கிறார்கள். அதுமட்டுமல்ல கடவுளே இல்லை என்று வாதிடும் ஜைனர்களும், பவுத்தர்களும் கர்மாவை உண்மையென்றெ நம்புகிறார்கள்.

அப்படிப்பட்ட கர்மா ஆத்மாவை தானக தேடி அடைய முடியாது. கர்மாவிற்கு தானாக முடிவு எடுக்கும் அறிவு உண்டு என்றால் பலவிதமான சிக்கல்கள் மிகுந்த தாகி குழப்பங்களே மிஞ்சும், அதனால் இந்த ஆத்மாவின் கர்மாவை இதனோடு இணைக்க வேண்டும். என்று முடிவெடுப்பதற்கு ஒருவன் தேவை. அவனே இறைவன்.

ஆகவே உலகை படைப்பதற்கும், கர்மாவை நெறிப் படுத்துவதற்கும் தானாக எதுவும் ஆகாது. அதற்கு ஆண்டவன் என்பவன் நிச்சயம் தேவை என்று சைவ சித்தாந்தம் வாதிடுகிறது.

ஒரு பானையை பார்த்தவுடன் அதை செய்தவன் கண்முன்னே இல்லாவிடட்டாலும் அப்படி ஒருவன் இருக்கவேண்டும் என்று நம்மனம் நம்பிக்கை கொள்கிறது. இதே போலவே காட்சிக்கு புலனாகாமல் கடவுள் இருந்தாலும் அவரை இருப்பவர் என்று ஏற்றுக்கொள்வதில் எந்த தவறும் இல்லை என்று சைவ சித்தாந்திகள் கூற்றின் அடிப்படையாகும். இதற்கு மாறுபாடான கருத்துக்களும், இருக்கிறது. அவற்றையும் தெரிந்து கொண்டால்தான் நமது ஞானம் என்பது பூர்த்தியானதாக இருக்கும்.

உலகம் என்பது உண்மையாக இருக்கிறது என்றால்தான் அந்த உலகை படைத்தவனும், இருக்க வேண்டும் என்று நம்பவேண்டியது இருக்கிறது. உலகம் என்பதே இல்லையென்றால் அதை படைத்தவன் தேவையே இல்லையல்லவா?

ஆனால் உலகம் இருக்கிறது என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது. நமது கண்களுக்கே தெரிகிறது என்பது மட்டும்தானே ஆதாரம். ஆனால் நமது கண்கள் காட்டும் காட்சிகள் அனைத்துமே உண்மையானதுதானா? சத்தியமானதுதானா? என்று பார்த்தால் பல நேரங்களில் நமது கண்கள் இருப்பதை இல்லாமலும், இல்லாததை இருப்பதாகவும் காட்டி பொய்யான பல சித்திரங்களை உருவாக்குகிறது. இப்படி புலன்கள் உருவாக்கும் பொய்சித்திரங்களை நம்பி பலமுறை நாம் ஏமாந்து இருக்கிறோம்.




இத்தகைய நம்பகத் தன்மை இல்லாத புலன் உலகம் இருக்கிறது என்று காட்டுவதை எப்படி நம்ப இயலும்? ஆகவே புலக் காட்சி, சந்தேகம் எனும்போது உலகத்தின் இருப்பும் சந்தேகமாகி விடுகிறது. சந்தேகமான ஒரு பொருளை உருவாக்க கடவுள் எதற்கு?




எனவே கடவுள் என்பது தேவையில்லாத பொருள், என சிலர் கருதுகிறார்கள். இக்கருத்தை மேலோட்டாமாக பார்க்கும் போது அதில் உண்மை இருப்பது போல் நமக்கு தோன்றும். ஆனால் நமது அறிவை உள்முகமாக திருப்பி சிந்தனை செய்தால் எது உண்மை என்பது நன்கு புலப்படும்.

புலன்கள் எல்லா நேரமும் உள்ளதை உள்ளபடி காட்டவில்லை என்பது உண்மைதான். என்பதற்காக உலகமே பொய் என்று வாதிடுவது அறிவுடைமை ஆகாது. உலகத்தை மாயை என்று கூறும் சங்கர வேதாந்திகள் கூட அது ஆகாயத்தாமரை போலவோ மலடி மகன் போலவோ முற்றிலுமாக இல்லாதது அல்ல என்பதை ஒப்புக்கொள்கிறார்கள். புலன்கள் நம்பகத்தன்மை அற்றது என வாதிடும் இம்மானுவேல் காண்ட் போன்ற மேலைநாட்டு தத்துவஞானிகள் கூட அவைகள் எதையோ காட்டுகின்றன என்பதை மறுக்கவில்லை. எனவே உலகத்தை ஒரு மாயா தோற்றம் என்று வைத்துக்கொண்டால் கூட அந்த தோற்றத்தை தோற்றுவிக்க ஒருவன் வேண்டும். ஆகையால் எந்த வகையில் பார்த்தாலும். இறைவன் ஒருவன் இருப்பது தெளிவாகும்.

சரி உலகம் உண்மையென்றும், கடவுள் இருக்கிறார் என்றும் வைத்துக் கொள்வோம். அப்படி வைத்துக்கொண்டால் கடவுள் ஏன்இந்த உலகத்தை படைத்தார். அதனால் அவருக்கு என்ன லாபம்? என்ற கேள்வி அடுத்ததாக எழும்புவது இயற்கை. இதற்கு சைவ சித்தாந்திகள் நல்ல பதிலை தருகிறார்கள். உலகம் படைக்கப்பட்டு ஒரு காலகட்டத்தில் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிடுகிறது. இதேபோன்று ஆத்மாகள் படைக்கப்பட்டு, முற்றிலுமாக இல்லாத வகையில் அழிக்கப்படுவது இல்லை. காலகாலமாக இறைவனைப்போல் நித்தியமாக இருக்கின்ற ஆத்மாக்கள் ஜனன மரணம் எடுத்து தனது நிலையை சுத்திகரித்து இறைவனோடு கலப்பதற்கு உலகம் என்பது நிச்சயம் தேவை. எனவே உயிர்கள் பிறவி பெருங்கடலை கடப்பதற்கு கடவுள் உலகத்தை படைத்துள்ளார். என்பது சித்தாந்திகளின் அறிவார்ந்த பதில்களாகும்.

உயிர்களை கரையேற்றுவதற்கு இறைவன் உலகத்தை படைத்திருக்கிறான் என்றால் அப்படிப்பட்ட இறைவனின் இயல்புகள் என்னவாக இருக்கும் என்பது நமக்குள் எழும் அடுத்த கேள்வியாகும். அதற்கு சைவம் இறைவன் என்பவன் சத்சித் ஆனந்தம் என்ற மூன்று இயல்பாக இருக்கிறான் என்ற பதிலை தருகிறது. சத் என்றால் உண்மையான பொருள் என்று அர்த்தம் சித் என்றால் தானே இயங்குதல் என்பது பொருளாகும். ஆனந்தம் என்றால் உண்மையே வடிவாய் தானே இயங்கி தன்னையும், மற்ற அனைத்தையும், இன்பமாக வைத்துக் கொள்ளுதல் என்பது பொருளாகும்.

ஆகவே இறைவன் இந்த மூன்று இயல்பாக இருக்கிறான் என்பது சித்தாந்தம் கூறுவதை அனுபவ அறிவு நிச்சயமாக ஏற்றுக்கொள்ளும்.

சைவ சித்தாந்தத்தின் கடவுள் கருத்தை இதுவரை சுருக்கமாக பார்த்தோம். இந்து மதத்தை தவிர உலகில் உள்ள வேறு எந்த மதத்திலும் இத்தகைய வினாக்கள் எழுப்பி அறிவு பூர்வமான பதில்களை கொடுக்கும் வழக்கமில்லை. ஏன்? சில மதங்களில் கேள்விகள் கேட்பதற்கே அனுமதி இல்லை. அறிவுக்கு பொருந்திவரக்கூடிய சகல விஷயங்களையும்

இந்து மதம் தனக்குள் கொண்டிருந்தாலும். அது தன்னை விளம்பர படுத்திக் கொள்ள விரும்பவில்லை என்பதனால் அரைகுறையாக மற்ற மதங்கள் தாங்களே அறிவின் சிகரம் என்று குதியாட்டம் போடுகிறது. நாம் நம்மை அலங்காரப் படுத்திக் கொள்ள விரும்பவில்லை என்றாலும் கூட சுத்தமாக இருப்பது தவறு என்று யாரும் சொல்லிவிட முடியாது. மற்றவர்கள் நம்மை முட்டாள்கள் என்றே பட்டம் கட்டாமல் இருப்பதற்காகவது நமது அறிவு விஷயங்களை வெளிப்படுத்த வேண்டும்.

சைவ சமயத்தில் இன்னும் பல பிரிவுகள் இருக்கிறதென்று ஆரம்பத்திலேயே பார்த்தோம். அந்த பிரிவுகளின் அனைத்து சிந்தனைகளையும் வரும் அத்தியாயங்களில் ஆழமாக சிந்திப்போம். அப்படி செய்தால்தான் இந்து மதத்தின் உண்மை வடிவை முழுமையாக தரிசிக்கலாம்..

**யோகி ஸ்ரீ ராமானந்த குரு**

மேலும் தொடர்பு கொள்ளவும்

**போன்: 09442426434**




# ஆன்மிக உலகின்

# முதல் இலவச

# இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com

aanmeegamalr (app)–ல்

படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**

# வாழ்க்கையை விட, இறைவனை முக்கியமாகக் கொள்ளுங்கள்

120 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

அன்பு குருதேவர் அருளுகிறார்: "வாழ்க்கையானது இன்ப, துன்ப நிகழ்வுகள் நிறைந்ததாகும், அது எல்லையற்ற பல்வகைகொண்ட ஒரு பல்வண்ணக்காட்சி ஆகும். எந்த இரண்டு பொருட்களும் ஒரே மாதிரியாக இல்லை. ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் வெவ்வேறானது. ஒவ்வொரு மனிதனும் வேறு விதமான முகமும் வேறுவிதமான மனமும், ஆசைகளும் கொண்டவராக உள்ளார். ஒவ்வொரு நாளும் நம்முடைய அனுபவங்கள் ஒரே மாதிரியாக இருந்தால் நாம் சலிப்புறுவோம். சீக்கிரமே வாழ்க்கையில் அலுப்படைந்துவிடுவோம். சுவர்க்கம்கூட ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரியாக இருந்தால் நாம் அதை விரும்பமாட்டோம். பல்வகைமையை நாம் மகிழ்ந்து அனுபவிக்கின்றோம். சுவர்க்கம் மாறுதலே இல்லாத ஒன்று என்ற கருத்து முற்றிலும் தவறானது. அப்படி அது சலிபூட்டுவதாக இருந்தால் எல்லா மகான்களும் ஒரு சிறு மாற்றத்திற்காக பூமிக்குத் திரும்பிவர பிரார்த்திப்பார்கள். சுவர்க்கமானது எல்லையற்ற வகையில் மாறுபட்டது. என்றும் இன்பகரமான புதியது; ஆனால் பூமியோ பெரும்பாலும் விரும்பத்தகாத முறையில் புதியதாகும்!"

"இருப்பினும் அனேகர், வாழ்க்கை எவ்வளவுதான் சோதிப்பதாக இருந்தாலும், அதற்குப் பழக்கப்பட்டுவிட்டு அதைவிட வாழ்வதற்கு வேறு வழியே இல்லை என்று எண்ணிக்கொள்கின்றனர். இந்த வாழ்வை ஆன்மீக வாழ்வுடன் ஒப்பிட முடியாமல், இப்பூவுலக வாழ்வு எவ்வளவு வேதனையையும் சலிப்பையும் கொண்டுள்ளதென அவர் அறியார். உண்மையில் இவ்வாழ்வு நிஜமானதல்ல; அது ஒரு பொழுதுபோக்கு மட்டுமே. பழைய திரைப்படங்கள் திரும்பத் திரும்ப திரையிடப்படுவதைப் போலவே. அடிப்படையில் அதே பழைய நிகழ்ச்சிகள் வாழ்க்கையில் நிகழ்வதுடன், மீண்டும் நிகழ்கின்றன. மேலும் வாழ்க்கை முடிவில்லாது போய்க்கொண்டிருந்தாலும், பழைய திரைப்படங்களில் விவரிக்கப்பட்ட அதே கருத்துக்கள் மீண்டும் மீண்டும் விளக்கப்படும். சரித்திரம் தன்னையே மீண்டும் நிகழ்த்திக்கொள்கிறது என்பது உண்மை. நாம் அனைவரும் அருங்காட்சியத்தின் காட்சிப்பொருட்கள்''!

மேலும் அவர் விளக்குகிறார்: "வாழ்க்கையில் எது நேர்ந்தாலும், அதே சந்தோஷமாகவும் தனிப்பட்ட முறையில் அல்லாமலும் நீங்கள் ஒரு திரைப்படத்தைப் பார்ப்பதுபோல் ஏற்றுக்கொள்ளுங்கள். நாம் வாழ்க்கைக்கு மிகுந்த முக்கியத்தும் கொடுக்காதபொழுது அது பொழுதுபோக்காக அமைகிறது. மனித தீமைகளுக்கு நல்லதோர் சிரிப்பு ஒரு தலைசிறந்த பரிகாரம். அமெரிக்க மக்களின் மிகச்சிறந்த பண்புகளில் ஒன்று அவர்களது சிரிக்கக் கூடிய வல்லமை. வாழ்க்கையைப்பார்த்து சிரிக்கக் கூடிய வல்லமை அற்புதமானது. இதை எனது குருதேவர் (ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வர்) எனக்குக் கற்பித்தார். அவரது ஆசிரமத்தில் என் பயிற்சியின் ஆரம்பகாலத்தில் நான் ஒருபோதும் புன்னைக்காமல் பயபக்தி நிறைந்த முகத்துடன் நடமாடினேன். ஒரு நாள் எனது குருதேவர், "இது என்ன? நீ ஓர் ஈமச்சடங்கிற்கு வந்திருக்கிறாயா? இறைவனைக் காண்பது சகல துன்பங்களின் மரணம் என்பது நீ அறியாயா? அப்படியிருக்க நீ ஏன் இவ்வளவு வாட்டமுடன் காட்சியளிக்கின்றாய்? இவ்வாழ்க்கைக்கு மிக அதிக முக்கியத்துவம் அளிக்காதே," எனக் குறிப்பிட்டார். இறைவனில் முழுமையான ஆனந்தத்தைக் காண்பதற்கு ஒருவர் மனதளவில் பூவுலக அனுபவத்தின் ஒவ்வொரு கொடிய துன்புறுத்தலுக்கும் அப்பாற்பட்டிருக்கவேண்டும் என்று எனக்குக் கற்பித்தார்."

"ஸ்ரீ கிருஷ்ணன் போதித்தது: "இன்பம் – துன்பம், லாபம் – நஷ்டம், வெற்றி – தோல்வி ஆகியன நிகழும்போது சமநிலை மனம் படைத்தவனாய், வாழ்க்கை எனும் போரை எதிர்கொள்! இங்ஙனமாக, நீ பாவத்தை அடையமாட்டாய். (பகவத் கீதை அத் 2 ஸ்லோகம் 38) எதுவந்தாலும் சரி, சரிசம மனோபாவத்தில் நிலைத்திருப்பது, மதிமயக்கும் ஆசைகளை வெல்வதற்கான

மிகச்சிறந்த வழிகளில் ஒன்றாகும். இதை நாம், என் உன்னத குருதேவருடைய உதாரணத்திலிருந்து கற்றுக் கொண்டேன். அவர் இறுதி வரை மாற்றமில்லாமல் இருந்தார். நமது ஆனந்தத்திற்கும் அமைதிக்கும் உள்ள இறைவனின் பாதுகாப்புதான் நமக்கு வாய்க்கக்கூடிய மிகப்பெரிய அரண். எல்லா சோதனைகள் மற்றும் துன்பங்களின்போதும், இறைவன் உங்களுக்கு அளித்துள்ள நல்லவைகளை நினைவில்கொள்ளுங்கள். உங்களுடைய ஆத்மா இறைவனின் தெய்வீகமயமான ஓர் ஆலயமாகும். இந்த ஆலயத்திலிருந்து மனித அறியாமை மற்றும் வரையறைகளின் இருள் வெளியேற்றப்படவேண்டும். வலுவுடனும் வல்லமையுடனும் ஆன்மாவின் உணர்வு நிலையில் இருப்பது எவ்வளவு அற்புதமானது!”

குருதேவர் கூறுகிறார்: “ எதற்கும் அஞ் சாதீர்கள். ஒருவரையும் வெறுக்காமல், அனைவரிடமும் அன்பு செலுத்திக்கொண்டு, இறைவனின் அன்பை உணர்ந்து கொண்டு ரூ் உங்கள் உணர்வுநிலை எனும் ஆலயத்தில் அவனது நிரந்தர இருப்பை வேண்டிஷெவாழ்வதுதான் இவ்வுலகில் வாழ்வதற்குரிய வழியாகும். ஏனைய ஆசைகளைக் கொண்டுள்ளோர் உண்மையான திருப்தியை அறிய மாட்டார்கள்.

மனிதன் இழந்துவிட்ட பொக்கிஷம் இறைவன் ஆவான்

அன்பிற்குரிய குருதேவர் அருளுகிறார்: “உங்களுக்குள் ஆசைகளைப் போஷிப்பதற்கு அனேக தாக்கங்கள் உள்ளன. ஒரு புது வடிவ மோட்டார் வாகனத்தைப் பார்க்கும்பொழுது, நீங்கள் ஒன்றைப் பெற விரும்புகிறீர்கள். ஒரு புது வடிவ வீட்டைக் கண்டவுடன் நீங்கள் அம்மாதிரி ஒன்றை விரும்புகிறீர்கள். நவநாகரீகமான உடை தோன்றியதும் உடனேயே அவ்விதமான உடையை அணிய மிகுந்த ஆவல்கொள்கிறீர்கள். இந்த ஆசைகள் எங்கிருந்து எழுகின்றன? நான் பலமணிநேரம் உட்கார்ந்து இதைப்பற்றிச் சிந்தித்ததுண்டு. உங்களுடைய ஆசைகள் அனைத்தையும் நீங்கள் வகைப்படுத்த முடியுமா? நான் என்னுடையவைகளை வகைப்படுத்தினேன். அதில் நல்லவற்றை மட்டுமே வைத்துக்கொண்டேன்; மேலும் இறைவனின் தொடர்பு எனக்கு கிட்டியபோது, அந்த எல்லா நல்ல ஆசைகளும் உடனடியாக நிறைவேற்றப்பட்டதைக் கண்டேன். இன்று ஒரு பொருளுக்காக ஆசைப்படுகிறீர்கள். நாளை வேறொன்றுக்காக ஏங்குகிறீர்கள். உங்கள் மனம், எல்லாம் வல்ல இறைவனிடயிருந்து இறங்கிவந்துள்ளதால் இப்பூவுலகின் கொடைகளில் திருப்தி அடைவதில்லை. மேலும் அது ஒருபோதும் திருப்தி அடையாது. ஏனென்றால் உங்கள் அனைத்து ஆசைகளையும் எந்த ஒன்றினால் நிறைவேற்ற முடியுமோ, அதை உங்கள் ஆன்மாவின் மிக உயர்ந்த மதிப்புடைய பொக்கிஷத்தை, நீங்கள் இழந்துவிட்டீர்கள்; அது இறைவன்தான்.”

“நல்லதும் தேவையானதுமான சில ஆசைகள் இருப்பது உண்மைதான்; அவற்றை நீங்கள் நிறைவேற்ற முயல வேண்டும். ஆனால் உங்கள் சிறிய ஆசைகளை நிறைவேற்ற முயலும் அதே சமயம், இறைவனுக்கான உங்கள் உன்னதமான ஆசையை முதலில் நிறைவேற்ற ஒருபோதும் மறந்து விடாதீர்கள். முக்கியம் குறைந்த ஆசைகளையும் கடமைகளையும் முதலில் நிறைவேற்ற வேண்டிய அவசியத்தில் உள்ள நம்பிக்கை, மனிதனின் மிகப்பெரிய மயக்கமாகும். எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது, எனது குருதேவர் ஸ்ரீ யுக்தேஸ்வரிடம் இளம் சீடனாக நான் பயிற்சி பெற்ற காலத்தில், “நாளைக்கு நான் நீண்ட நேரம் தியானம் செய்வேன்,” என தினமும் எனக்கு நானே வாக்குறுதி அளித்தவண்ணம் இருந்தேன். நான் அதைத் தள்ளிப்போட்டுக்கொண்டே இருக்கிறேன் என்பதை நான் உணர்வதற்குள் ஒரு முழுவருடம் கழிந்துவிட்டது. உடனேயே, காலையில் முதல் வேலையாக, குளித்து விட்டு பிறகு நீண்ட நேரம் தியானம் செய்யவேண்டும் என்று ஒரு தீர்மானம் செய்தேன். ஆனால்


www.aanmeegamalar.com

அப்பொழுதுகூட நான் படுக்கையை விட்டு எழுந்த உடனேயே, எனது தினசரி கடமைகளிலும், செயல்பாடுகளிலும் சிக்கிக்கொண்டேன். இதைத் தொடர்ந்து, முதலில் தியானம் செய்வதென உறுதி பூண்டேன். இவ்வாறாக ஒரு மகத்தான பாடத்தைக் கற்றுக் கொண்டேன்; இறைவனுக்கான எனது கடமை முதலிடம் பிடிக்கிறது; அதன் பிறகு நான் அதனினும் முக்கியத்துவம் குறைந்த மற்ற எல்லா கடமைகளையும் கவனித்துக் கொள்கிறேன். அப்படி ஏன் இருக்கக்கூடாது? “நீ எனக்கு முன்பாக ஏனைய கடமைகளை வைத்துக்கொள்ளும்போது, உனக்கு அமரத்துவத்தின் வாயில்களை நான் ஏன் திறக்க வேண்டும்?” என இறைவன் கேட்கிறான். மெய்ப்பொருளின் சிகரங்கள்வரை நீங்கள் உயர பறக்காவிட்டால், உங்களால் என்ன பயன்? இறைவனுக்கோ அல்லது மனிதனுக்கோ கொடுப்பதற்கு உங்களிடம் ஒன்றுமே இல்லை”.

மேலும் அவர் கூறுகிறார்: “ ஆகவே அவனை முதலில் நாடுங்கள். உலக கடமைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பது தவறான வாதம். ஏனெனில், எந்த நொடியிலும் யமதர்மராஜன் உங்களை அழைக்கக்கூடும். எந்த நொடியிலும் இங்கிருந்து நீங்கள் அகற்றப்படலாம். பிறகு வாழ்க்கைக்கு எதற்காக அவ்வளவு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்? ஏனெனில் வாழ்க்கை மிகவும் விசித்திரமானது. நீங்கள் மிகவும் பாதுகாப்புடன் உள்ளதாக எண்ணுகிறீர்கள். திடீரென உங்கள் அன்பிற்குரிய ஒருவர் இறக்கிறார் அல்லது


குருப்ரியா

உங்களுடைய ஆரோக்கியத்தை நீங்கள் இழக்கிறீர்கள். அச்சமயம் எல்லா பாதுகாப்பும் காணாமல் போகின்றது. என் அன்னையை நான் எவ்வளவு நேசித்தேன். மேலும் அவர் எப்பொழுதும் என்னுடன் இருப்பாள் என்று நினைத்தேன்; திடீரென அவள் மறைந்துவிட்டதாகக் கண்டேன்! (பரமஹம்ஸ யோகானந்தருடைய அன்னை இறந்தபொழுது அவருக்கு பதினோரு வயதுகூட ஆகவில்லை) மரணத்தைப் பற்றி பயப்படாதீர்கள்; ஆனால் அதற்குத் தயாராக இருங்கள்.”

“வாழ்க்கை என்பது அது தோற்றமளிப்பதுபோல் இல்லை, அதை நம்பாதீர்கள்; ஏனெனில் அது மிகவும் தந்திரமானதும் முழுவதும் ஏமாற்றங்கள் நிறைந்ததுமாகும். பூரணத்துவம் இவ்வுலகில் காணப்படும் ஒன்றல்ல. வாழ்க்கையைப் பற்றிய ஒரு பொய்யான வர்ணனையை நான் உங்களுக்கு கூறிக்கொண்டிருக்கவில்லை. இது இறைவனின் ராஜ்யம் இல்லை; இது இறைவனின் ஆராய்ச்சிக்கூடம். இங்கு அவன், தன்னுடைய ராஜ்யமான வீட்டிற்கு ஆன்மாக்கள் திரும்பிவர ஏதுவாக அவர்கள் தீய ஆசைகளை நல்ல ஆசைகளால் வென்று, அவனையே தம்முடைய உன்னத விருப்பமாகக்கொள்கிறார்களா என்பதைப் பார்க்க அவன் சோதித்துக் கொண்டிருக்கிறான்.”

இந்த வாழ்க்கையை நம்பாதீர்கள்; இது மிகுந்த தந்திரத்தை உடையது இது ஏமாற்றக்கூடியது; இது பொய்யானது என்கிறார் அன்பு குருதேவர். அதனால் முழுமையாக இறைவனை நம்புங்கள் என்கிறார். நம்பினால் மட்டும் போதாது, அவனை அடையவேண்டும். அதற்காக அவனுடைய தொடர்பை முதலில் நாட வேண்டும். அவனைப்பற்றியுள்ள ஆசையே சிறந்தது. எனவே இறைவனை முக்கியமாகக் கொள்ளுங்கள்; அவனைப்பற்றி அல்லாதுள்ள ஒரு சிறிய ஆசைகூட இருக்கக்கூடாது என்கிறார். அவனுடைய தொடர்பு கிடைக்க வேண்டுமென்றால் தியானம் செய்ய வேண்டும். அவனுக்கான முதல் கடமை தியானம். அவனுக்காக நமது நேரத்தை ஒதுக்குபவர்களிடத்தில் அவன் வருவான்; அல்லாதோர்களிடத்தில் அவன் வரமாட்டான் என்கிறார். இவ்வளவு அவர் கூறும்போது நாம் அதைக் கண்டிப்பாகக் கேட்டு அதைப் பின்பற்ற வேண்டும். அவ்வாறானால் நிச்சயம் நமக்கு இறைவனின் தொடர்பு கிடைக்கும்!

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909



# பாவம் தீர்க்கும்

# அண்ணாமலை

உலகம் முழுவதும் பரம்பொருளாய் பரவியிருப்பவர் அண்ணாமலையரான சிவபெருமான். பாவங்கள் பலவற்றையும் தீர்த்து நற்கதியில் சேர்க்கும் மந்திரமாக, 'நமசிவாய' எனும் பஞ்சாட்சரம் விளக்குகிறது. இன்னல் செய்தவர் யாராயினும் மனந்திருந்தி அண்ணாமலையாரை நினைக்க முக்தி பெறுவர். அவ்வகையில் படைத்தல் தொழிலைச் செய்யும் மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மதேவரின் பாவத்தை நீக்கியவராக அண்ணாமலையார் விளங்குவதைபுராணக் கதையொன்று விளக்குகிறது. இச் செய்தியை பிரம்மதேவர் சனகமுனிவரிடம் கூறியதாகச் சொல்லப்படுகிறது.

இந்திரலோகத்தை ஆளும் இந்திரன் ஒரு முறை பிரம்மதேவரைச் சந்திக்க வந்தான். படைப்புத் தொழிலைச் செய்யும் பிரம்மா, இந்திரன் தன்னைத் தேடி வரக் காரணம் என்னவென்று கேட்டார். அதற்கு இந்திரன், உலகில் வாழும் பலர் தன்னுடைய இந்திரபதவியை வேண்டி கடுமையான முறையில் தவம் செய்கின்றனர். அவ்வாறு செய்தால் தன் பதவி பறிபோய்விடும் எனக் கருதி உதவி கேட்க வந்ததாக எடுத்துரைத்தான். பிரம்மதேவர் அதற்கு என்னால் ஆகக்கூடியது ஏதேனும் உண்டோ? எனக் கேட்க, இந்திரன் ஆம் என பதிலளித்தான். உலகில் தவம் செய்பவர்களின் தவம் முழுமையாக நிறைவேறாதபடி ஒரு குறைபாட்டை உருவாக்க, ஏதாவது செய்யுங்கள் எனக் கூறிச் சென்றான்.

பிரம்மதேவர் இந்திரனுக்கு உதவ எண்ணங் கொண்டு, தன் தீவிர சிந்தனையினடிப்படையில், தேவலோகப்பெண்கள், நாகலோகப் பெண்கள், பூவுலகில் வாழ்கின்ற பெண்கள் ஆகிய இவர்களின் ஒட்டுமொத்த அழகினையும் முறியடிக்கும் படியாக ஓர் அழகான பெண்ணை உருவாக்கினார். அவ்வாறு படைக்கப்பட்ட பெண் திலோத்தமை ஆவாள்.

திலோத்தமையின் அழகைத் தவம் செய்பவர்கள் கண்டால், மதிமயங்கி விடுவர். அதனால் தவம் குறைபாடு அடையும். யாரும் இந்திரபதவியை அடையமுடியாது என்றெண்ணி இவ்வாறான வடிவத்தைப் படைத்தார். திலோத்தமையின் அழகு படைப்புக்கடவுளான பிரம்மதேவரையே ஆசைப்படச் செய்தது.

தான் படைப்புக்கடவுள் என்பதையும் மறந்து திலோத்தமையை விரும்பினார். பிரம்மதேவரின் ஆசையை உணர்ந்த திலோத்தமை, என்னைப் படைத்த நீங்கள், எனக்குத் தந்தையாவீர்கள், ஆதலால் என்னை விட்டுவிடுங்கள் எனச் சொல்லி மன்றாடினாள். பிரம்மதேவர் மதி மயக்கத்தால் அவள் கூறியதைக் கேட்கவில்லை. திலோத்தமை ஓடி ஒளிந்துகொண்டாள். பிரம்மதேவர் நான்கு பக்கங்களிலும் தேடினார்.







www.aanmeegamalar.com

திலோத்தமை கிடைக்கவில்லை.

திலோத்தமையை கண்டடைய பெருவிருப்புக் கொண்டிருந்த பிரம்ம தேவரின் கண்களுக்கு ஒருநாள் அகப்பட்டு விட்டாள். அவரது கைகளுக்கு அகப்படக்கூடாது எனக்கருதிய திலோத்தமை பெண் மானாகி ஓடினாள். பிரம்மதேவர் ஆண்மானாகி விரட்டினார். பிரம்ம தேவரிடம் தப்பிக்க இயலாது என்ப தறிந்து, பெண்கிளியாகப் பறந்தாள். அவரோ ஆண் கிளியாகிப் பின் தொடர்ந்தார்.



ராம்கணேஷ்

திலோத்தமைக்கு எவ்வாறு தப்பிப்பதென்று புரியாமல் திகைத்து நின்றாள். திலோத்தமையின்கண்க ளுக்கெதிரில் மலையுரு வில் அண்ணாமலையாக இருக்கும் சிவ பெருமான் தெரிந்தார்.



இறைவா! நீரே என்னைக் காக்க வேண்டுமென்று சொல்லி வீழ்ந்தாள். அந்நேரத்தில் மலை பிளவுபட,அதி லிருந்து வேடன் வடிவில்சிவ பெருமானும் வேடிச்சிவடிவில் பார்வதிதேவியும்வெளிப்பட, வேதங்கள் நாய்களாக அவர்களுடன் வந்தன. இதனைக் கண்ட பிரம்மதேவர் அச்சமடைந்து, திலோத்தமை மேல்கொண்ட ஆசையிலிருந்து நீங்கித் தெளிவு பெற்றார்.

சிவபெருமான்பிரம்மதேவரிடத்தில் திலோத் தமையைப் படைத்து, அவ ளை நீயே விரும்பியதால் உண்டாகிய பாவம் கற்பகோடிக்காலம் ஆனாலும் தீராது. இருப்பினும் மலை வடிவத்தி;ல் இருக்கும் என்னை தரிசித்ததால், நீ செய்த பாவத்தைத் தீர்த்துவிட்டோம் எனச் சொல்லி திருவாய்மலர்ந்து, பிரம்மதேவருக்குப் பாவம் ஏற்படாத வாறு அருள்புரிந்தார்.

'வாக்கினான் வடிவினால் மனத்தி னால்பவம்
தாக்கினார் அருணைமா சயிலம் நோக்கினால்
நீக்கினார் என்பது நிகழ்த்தி நான்மறை
தேக்கினான் சிலகதை செப்பல் ஆயினான்'

அருணாசலப் புராணம்

ஞான வடிவாய் விளங்கும் அண்ணாமலை யாரை ஒருவன் அடைந்தால், அவன் புத்திக் குறைபாட்டால் செய்த பாவம் நீங்கும். சொல்லாலும் செயலாலும் மனத்தாலும் தீயனவற்றைச் சொல்லியும் செய்தும் நினைத்தும் பாவத்தை அடைந்தவர்கள் திருவண்ணாமலை சென்று, அங்கு வீற்றிருக்கும் திருவண்ணாமலையாரை வணங்கினால் பாவம் நீங்கி, புத்தி தெளிவுபெற்று நற்கதி பெறுவர்.

முனைவர் கி. ராம்கணேஷ்,
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை,
ஸ்ரீ சரஸ்வதி தியாகராஜா கல்லூரி,
பொள்ளாச்சி, போன்: 9715984239

# திருமந்திரம் உணர்த்தும் நிலையாமை

நிலையான வீடுபேறின்பத்தினை நோக்கிப் பயணிப்பதற்குப் பதில், உண்மையில் நிலையில்லாதவற்றை நிலையானது என நம்பி, ஏமாறும் போலியான வாழ்க்கையையே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

ஒவ்வொரு நொடியும் இறைநிலை நம்முடைய அருகிலேயே இருந்து நம்மை வழிநடத்த காத்திருந்த போதிலும், நம்முடைய அறியாமையால் அதனை உணர்ந்து கொள்ளாமல் வாழ்கின்றோம். இத்தகைய அறியாமையில் நாம் மூழ்கியிருக்கும் வரை பிறவா இன்பமாகிய வீடுபேற்றினை நம்மால் அடைய இயலாது.

நாம் இருக்கமாகப் பிடித்துள்ளவற்றில் நிலையில்லாதவை எவை என்பதை உணர்ந்து, உணர்ந்த அளவிலேயே அவற்றை விட்டுவிட்டு, நிலையானவற்றை மீண்டும் இருக்கமாகப் பிடித்துக் கொண்டால் மட்டுமே நம்முடைய பிறவிப்பயனை அடைய இயலும்.

இத்தகைய பிறவிப்பயனை அடைவதற்குத் தடையாக உள்ள நிலையற்ற பொருட்கள் எவை என்பதை திருமூலர் மிகத் தெளிவாக பட்டியலிட்டுள்ளார். நம்முடைய உடல், நாம் சேர்த்துவைக்கும் செல்வங்கள், நம்முடைய இளமை இவை மூன்றும் நிலையில்லாதவை என்று குறிப்பிடுகின்றார்.

நிலையானது – நிலையற்றது என்றால் என்ன என்பதை முதலில் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நிலையானது என்றால் இறுதிவரை நிலைத்து நிற்கக்கூடியது. நிலையற்றது என்றால் இடையிலேயே அழிந்துவிடக்கூடியது.

ஒவ்வொரு நாளும் நாம் போற்றிப் பாதுகாக்கின்ற இந்த உடல் நிலையானதல்ல. மாறாக அழிந்து விடக்கூடியது. இவ்வாறு நிலையில்லாமல் அழிந்து விடக் கூடிய உடம்பினால் ஒரு பயனும் ஏற்படாது. இறுதியாக நாம் செல்லும் பயணத்தில் நாம் மேற்கொண்ட விரதமும், ஞானமுமே நம்மோடு வரும். எனவே நல்ல செயல்களையே செய்து நாம் பிறந்ததன் பயனை அடைய வேண்டும். இதைத் தான் திருமூலரும்,

"பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநடவாதே"

என்ற பாடல் வரிகளில் சுட்டுகின்றார்.

ஆரம்பத்தில் சிறு முட்டையாக தாயின் கருவில் தோன்றி, முந்நூறு நாட்கள் அங்கேயே தங்கியிருந்து, வெளிவரும்போது எத்தன்மையும் இன்றி வெளிவரும். பிறகு பன்னிரண்டு ஆண்டுகள் வரை உலக நிகழ்வுகளை அறிந்துகொள்ளும். அதைத் தொடர்ந்து எழுபது அண்டுகள் வரை, தான் அறிந்துகொண்ட உலக நிகழ்வுகளில் பற்று டன் இயங்கும். ஆக மொத்தம் எண்பத்து இரண்டு ஆண்டுகள் உலகப் பற்றோடு பயணிக்கும். எண்பத்து இரண்டாண்டுகள் நீங்கியதும் உலகப் பற்றுகள் சிறிது சிறிதாக விளகும். அப்போது இந்த உடல் நிலையானதல்ல என்பது விளங்கும். இதுவே மனித இயல்பு என்ற தத்துவத்தை,


www.aanmeegamalar.com

"முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினிற்
கெட்ட தெழுபதிற் கேடறி யீரே"

என்ற திருமந்திரப் பாடல் வரிகளில் விளக்கிக் கூறுகின்றார்.

உடல் நிலையில்லாதது என்று குறிப்பிட்ட திருமூலர், உடலினை அடுத்து நாம் சேர்த்து வைக்க எண்ணும் செல்வத்தினையும் நிலையில் லாதது என்று குறிப்பிடுகின்றார். பணம் பத்தும் செய்யும் என்ற நிலை மாறி, பணம் பதினொன்றும் செய்யும் என்பதே உண்மை. பணத்தின் அந்தப் பதினோராவது செயல் என்னவென்றால் ஒருவ ரிடம் மட்டுமே நிலைத்து நிற்காமல் பலரிடமும் பயணிப்பதே ஆகும். இத்தகைய செல்வத்தினை நாம் சேர்த்து வைப்பதில் ஒரு பயனும் இல்லை. ஓரளவுக்கு மேல் நம்மிடம் செல்வம் பெருகிவிட்டது என்றால் அது நம்மை அடிமையாக்கிவிடும்.

திங்களின் குணம் போன்றதே செல்வத்தின் குணமும் என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். இதனை நாம் உணர்ந்து கொண்டோமேயானால் நிலையில்லாத செல்வத் தின் பக்கம் நாம் சாய்ந்துவிட மாட்டோம்.

வாழும் வாழ்க்கைக்குச் செல்வம் வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் செல்வத்தைச் சேர்பதற்காக மட்டுமே வாழ்வது என்பது தவறு. திங்களிடம் உள்ள வளர்பிறை போல், வளர்ந்து கொண்டே செல்லும் தன்மை கொண்டது செல்வம் என்று தவறாக எண்ணாமல், திங்க ளிடம் காணப்படும் தேய்பிறை போன்று, தேய்ந்து கொண்டே செல்லும் தன்மையதே செல்வம் என்ற உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும். மேலும் என்றும் தேயாத செல்வம் எது என்றால் அது இறைவனுடைய திருவடி நிழலே என்பதையும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதை,

"இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்குந்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே"

என்ற பாடல் வரிகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

நம்முடைய நிழல் நம் கூடவே பயணித்தாலும் அதனால் நமக்கு ஒரு பயனும் இல்லை. இதைப் போன்றதே நாம் சேர்த்துவைத்துள்ள செல்வ மும். நம்முடைய கையில் இருக்கும் வரை நம் முடையது என்று கூறுகிறோம்.

இறுதிவரை அவை நம்முடன் இருக்கப்போவ தில்லை. மேலும், இறுதியில் அவற்றால் நமக்கு ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை. நம்மிடமிருக் கின்ற உடல், அதற்கான காலம் வந்ததும் நம்மை விட்டுப் பிறிந்து செல்வதைப் போல நாம் சேர்ந்து வைத்திருக்கின்ற செல்வமும் அதற்கான காலம் வந்ததும் நம்மைவிட்டு நீங்கிச் சென்றுவிடும் என்ற நிலையாமைத் தத்துவத்தை,

"தன்னது சாயை தனக்குத வாதுகண்டு
என்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணொலி கண்டுகொ ளிரே"

என்ற பாடல் படம்பிடித்துக் காட்டு கின்றார்.

தேனீக்கள் ஒவ்வொரு மலிரிலும் அமர்ந்து சிறிது சிறிதாக தேனைச் சேமித்து மரக்கொம்பில் கூடுகட்டும். இவ்வாறு தான் சேர்த்த தேனைத் தன்னுடைய மனமாற யாருக்கும் வழங்காத காரணத்தால், உடல் விமையுடைய யாரேனும், அத்தேனீக்களை அழித்து அக்கூட்டில் உள்ள தேனைத் தனதாக்கிக் கொள்வர். இது நாம் அனைவரும் அறிந்திருந்த உண்மையே. இதைப் போன்றதே நாம் சேர்த்து வைக்கின்ற செல் வமும். நம்மைவிட வலியவரிடம் எப்போது வேண்டுமானாலும் அச்செல்வம் சென்றுவிடும் என்ற உலக நியதியை,

"ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை
வைத்திடும்
ஒட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்தது கைவிட்ட வாறே"

என்ற பாடல் வரிகளில் குறிப்பிடுகின்றார்.

நாம் சேர்த்துவைத்திருக்கின்ற செல்வமும், அச் செல்வம் கொண்டு வாங்கிய ஆடு, மாடு முதலிய பொருட்களும்,என்று இவை அனைத்தும், படகில் பயணம் செய்யும்போது இன்ன நேரத்தில்தான் படகு கவிழும் என்றில்லாது எப்போது வேண்டு மானாலும் கவிழலாம் என்பது போல் எப்போது வேண்டுமானாலும் அழிந்துவிடும் தன்மை கொண்டது. மேலும் இன்னும் புரியும்படி கூற வேண்டுமாயின், பல்வேறு எழும்புகளையும் கூட்டி, நரம்புகளைக் கொண்டு கட்டிவைத்து, தசைகளால் பூசப்பட்ட இந்த உடலை எந்நேரத்திலும் காலன் வந்து பறித் துச் செல்லலாம் என்பது போல் நம்மிடமுள்ள செல்வமும் எந்நேரம் வேண்டு மானாலும் நம்மை விட்டு அழிந்துவிடும் என்ற செல்வம் குறித்த நிலையாமையை,

"மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லுங் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடுபேறாகச்
சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறி யாரோ"

என்ற பாடல் வரிகளில் சுட்டுகின்றார்.

உடலும், செல்வமும் நிலையில்லாதது என்பதைக் குறிப்பிட திருமூலர் இவை இரண்டோடு சேர்த்து இளமையும் நிலையானது அல்ல என்று கூறிப்பிடுகின்றார்.

நாம் வாழும் வாழ்க்கை இராட்டிணத்தில் பயணிப்பது போன்றது. ஒரு பொருளை மட்டும் குறிப்பாக நினைத்துக் கொண்டு அதனை நோக்கியே நாம் வந்தோமானால், நாம் மேலே இருக்கும்போது நாம் விரும்பிய அப்பொருள் கீழே இருப்பதாகத் தோன்றும். நாம் அதனை நோக்கி கீழே வரவர அப்பொருள் நமக்கு மேலே சென்றுவிடும். இந்த உலக உண்மையை உணர்ந்துகொண்டால் மட்டுமே நம்முடைய வாழ்க்கை சிறக்கும்.

நாள்தோறும் கிழக்கே தோன்றும் சூரியன் மெல்ல மெல்ல உச்சிக்கு ஏறிவந்து, பிறகு கீழிறங்கி மேற்கே மறைந்துவிடும். சூரியனுடைய இத்தகைய செயலைத் தினமும் நாம் பார்த்திருந்தும் நமக்கும், நம்முடைய இளமைக்கும் இந்த நிலை வரும் என்பதைத் துளியும் எண்ணார். இதைப்போலவே இளங்கன்றானது சில ஆண்டுகளில் வளர்ந்து எருதாக ஆகின்றது. பின் காலம் செல்லச் செல்ல இறந்துவிடுகின்றது. சூரியனின் இத்தகைய செயலையும், எருதின் இத்தகைய செயலையும் நாள்தோறும் காணும் நாம் நம்முடைய இளமையும் இதைப்போலவே நிலையில்லாதது என்பதை உணர மறுக்கின்றோம் என்று நிலையில்லாத இளமையை,

"கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தொரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேறார் வியனுல கோரே"

என்ற திருமந்திரப் பாடல் கொண்டு சுட்டிக் காட்டுகின்றார்.

ஒவ்வொரு நாளும் காலை, நண்பகல்,மறையும் மாலை என்று மூன்று தன்மைகளில் தோன்றி மறைகின்ற கதிரவனைப் போல, ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வையும் பிறந்தது முதல் பதினாறு அண்டுகள் வரை கல்வியும், நாற்பத் தாறு ஆண்டுகள் வரை இல்லறம் பேணலும், அதற்குமேல் நிறை வாழ்நாள் என்னும் நூற்றி யிருபது ஆண்டுகள் வரை இறைநிகழ்வு அகலாமையும் என்று மூன்று தன்மைகளில் வகுத்துள்ளார் இறைவர். இம்மூன்றையும் முறையாக இன்பம், பொருள், அறம் என்ற தன்மையில் இறைவர் நிகழ்த்தி வருகின்றார். இறைவருடைய இத்தகை நிலையினைத் துளியும்




எண்ணாமல், நிலையில்லாத இளமையை நிலையானது என்று எண்ணி போலியாக வாழ்வது தவறான வாழ்வு என்பதை,

"கண்ணனுங் காய்கதி ரோனும் உலகினை
உண்ணின் றளக்கின்ற தொன்றும் அறிகிலார்
விண்ணுறு வாரையும் வினையுறு வாரையும்
எண்ணுறும் முப்பதில் ஈர்ந்தொழிந் தாரே"

என்ற திருமந்திரப் பாடல் வரிகளில் விளக்கிக் கூறுகின்றார்.

குழந்தை பிறப்பது, அக்குழந்தை வளர்ந்து இளைய பருவம் அடைவது இறுதியில் முதுமை வந்து மறைவது என்ற இவை அனைத்தும் அனைவருக்கும் நிகழ்வதே. நிலையில்லாத இந்த நிகழ்வினை நாள்தோறும் நம்மைச் சார்ந்தவர்களிடம் நாம் காண்கின்ற போதிலும், அழியாத வீடுபேறின்பத்தினை அடைய எண்ணாமல், அழிந்துபோகின்ற இத்தகைய செயல்களிலேயே நம்மை நாம் ஈடுபடுத்திக் கொண்டுள்ளோம் என்பதை,

"பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலங் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலங் கடந்தண்டம் ஊடறுந் தானடி
மேலுங் கிடந்து விரும்புவன் நானே"

என்ற பாடல் வரிகளில் விளக்குகின்றார் ஆசிரியர்.

இவ்வாறாக நம்முடைய இந்த உடலும், நாம் சேர்த்து வைத்துள்ள செல்வங்களும், நாம் கொண்டாடுகின்ற இளமையும் நிலையில்லாதவை என்பதை நன்கு உணர்ந்து அதன்படி மனதைச் செலவிடாமல், என்றும் அழியாத நிலையான செல்வமாகிய வீடுபேரின்பத்தை வழங்கும் இறை நிலையோடு நம் மனதை இணைத்து இன்புற்று வாழ்வோம்.



ப.கற்பகராமன்

முனைவர் ப. கற்பகராமன்
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
சோனாகலைமற்றும் அறிவியல்
கல்லூரி, சேலம் 05.
போன்:9894210651

# பந்தமற்றது, நிரந்தர பந்தமுள்ளது என்பதே பிறப்பு

உயிர் சக்திக்கு காரணமான ஒரு சுழற்சியே முதற்சுழற்சி. அதற்கே உயிர்சுழற்சி என்று பெயர். உயிரிலிருந்து உயிர் என்பது அச்சுழற்சியிலிருந்தே பிரியும். அதன் பிறகு உயிரிலிருந்து பிரிந்த உயிர்ச்சுழற்சியில் பற்பல உயிர்ச்சுழற்சிகள் இருக்கும். ஒரு கைக்கடிகாரத்திற்குள் பல சக்கரங்கள் மாறி மாறி சுழன்று பெரிய முள், சிறிய முள் இவைகளை நகர்த்தி காலத்தைக் காட்டுவதைப் போன்றதே இது. சொன்ன விஷயத்தில் மனித உயிர் சக்கரம் என்பதே வேறு. அதிலிருந்து தோன்றிய உயிர்கள் மனிதனாய் பிறக்கச் சக்கரத்தில் உள்ள உயிர்களே கட்டிப் போடப்பட்ட பாசத்தொடர்பு என்ற பிறப்புணர்வை வர்க்கத்திற்கும், மனித தேகத்திற்கும் தருகிறது. இதனால் மனிதன் அடிக்கடி பிறக்கிறான். இவைகளை வைத்தே நாம் பிறப்பு, இறப்பு, விஞ்ஞானம் இவைகளை தோற்றத்தை அறிந்தோம். உலகம் இன்றுவரை உயிர்க்குலத்தோடு பிறக்க பஞ்சபூத உணவோடு ஒட்டிக் கொள்ளும் பாச உணர்வே உயிர்களின் நிரந்தர தன்மைக்கு காரணம். பாசம் என்றால் ஆசை அல்லது நினைவுப்படிப்பு, உணர்வு, பாலுணர்வு, காமபந்தம் என்று பெயர். சுழற்சியாய் பிடிப்புடன் வருவதற்கு இதுவே காரணம். மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஜெனரேட்டர்களின் சக்கரங்களை சுழற்றிவிடும் பட்டை போன்றதே பாசம்.

❖❖❖

உயிரின் வேகம் அல்லது அதன் சுழற்சி என்றால் என்ன? இதன் உண்மையான பொருள் முற்றிலும் நினைவுடன் வாழுகின்ற ஒரு தன்மை என்பதே இதன் பெயராகும். இது எப்பொழுதும் முடிவடையாமல் உலகில் இருந்து கொண்டிருக்கிறது. சிறிது மண்டலத்தில் பரவிக் கொண்டே



இருக்கிறது. உயிர்ப்பை ஏற்படுத்தும் சில பொருள்களில் இருந்து கொண்டு திடீரென்று வேலை செய்து உயிராக பிறக்கின்றது. இப்படி முதலில் பிறக்கும் உயிருக்கு ஒவ்வொன்றிற்கும் உருவம் கிடையாது. இயக்கம் உண்டு. இதன் துணையுடன் உலகை அனுபவிக்க வாழ உயிர்களுக்கு சட்டை போல உடம்பு என்றும் உருவங்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. இங்கு உயிரையும் உடம்பையும் தோற்றுவிக்கப்படுகின்ற பிறப்பு வடிவம் என்றே சொல்லலாம். ஆக வடிவம், உயிர்ப்புத்தன்மை, உயிருக்கு காரணமான வேகம். இம்மூன்றுமே சேர்ந்து இயங்குகிறது.

❖❖❖

உதாரணத்தை கவனித்து படிக்கவும். இரண்டு கைக்கடி காரங்கள் முழுமையாக தயாரிக்கப்படாமல் ஒரே ஒரு சக்கரத்தை மட்டும் அதில் பொருத்தாமல் இரண்டையும் தனியே பிரித்து வைத்திருந்தார்கள். அப்படியிருந்த இரண்டு கடிகாரங்களும் தேவைப்படுகின்ற ஒரு சக்கரத்தால் மட்டும் முடிவடையாமல் நின்று கொண்டிருந்தது. ஓடவும் இல்லை. கடிகாரத் தொழிலாளிக்கு மட்டும் உண்மை தெரியும். இந்த இரண்டு ஓடாத ஆனால் ஒரு குறை மட்டும் உள்ள கடிகாரங்களை கவனி. ஒன்றின் பெயர் பிறக்காத பிறப்பு, அல்லது பிறக்க இருக்கின்ற பிறப்பு, மற்றொன்றின் பெயர் பிறந்து இறந்த உயிர். இவையிரண்டுமே சுழற்சி உள்ளவைகள்தான். ஆனால் சுழற்சியைப் பிரிந்து நிற்கிறது. இதில் ஓடாத ஒரு கடிகாரத்தை மரணச்சுழற்சி என்று எண்ணு. மரணம் புரியும். பிறப்பு விளங்கும். தொடர்பு இறைவனால் நிகழும் என்பதும் தெரியும். பந்தமற்றது, நிரந்தர பந்தமுள்ளது என்பதே



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
C.V. நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
9444228203

பிறப்பிறப்பு. இரண்டிற்கும் தனித்தனி சக்கரங்கள் உண்டு. மரணம் பந்தப்பட்ட பிறப்பின் வேகத்திற்கு விடுதலை தரும் தற்காலிக சுழற்சியே.

❖❖❖

உலகில் எல்லா சிருஷ்டிகளுக்கும் தனித்தனி சக்கரச்சுழற்சிகள் உள்ளன. பற்பலவும் உள்ளன. அதனால் தனித்தனி உருவங்களாய் தனித்தனி வர்க்கங்களாய் விளங்குகின்றன. இவை அனைத்திற்கும் மொத்த பந்தபாசம் என்ற பிணைப்பு மரணம் என்ற சுழற்சி வேகம் மட்டுமே ஆகும். ஒரு வேகம் கட்டுப்பட்ட வேகம். மற்றொன்று கட்டுப்பாட்டிற்குள் வர இருக்கின்ற சுதந்திரம் அடைந்த வேகம். இப்படித்தான் மாறி மாறி சிந்திக்க வேண்டும். உயிரையும் அறிவையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

❖❖❖

மரணம் என்றால் என்ன? உலகில் பிறந்து வாழுகின்ற எல்லா உயிர்களின் இயற்கை நிகழ்ச்சிகளில் நிரந்தரமான ஆனால் வந்து வந்து போகின்ற தன்மை என்பது பிறப்பு. வந்து பிறந்தது மறைவது என்பதே மரணம். இது உயிர்களின் தவிர்க்க முடியாத இயற்கைத்தன்மை ஆகும்.

❖❖❖

மேற்சொன்ன நிகழ்ச்சி இயற்கையாக எப்படி நடக்கிறது. இந்த இயற்கை நிகழ்ச்சிக்கு என்ன காரணம்? இக்கேள்விக்கு பதிலே இல்லை. காரணமும் இல்லை. ஒரு நிகழ்ச்சி என்னவென்றால் உடலுக்குள் பாய்ந்து ஓடிக் கொண்டிருக்கின்ற பிராணவாயு ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஓடாமல் நின்று விட்டால் மேற்சொன்ன தன்மை ஏற்பட்டு விடுகிறது. உயிரோட்டமும் காற்றோட்டமும் இயற்கையே. இங்கு ஓட்டமே முக்கியம். இயற்கையில் இயற்கைத்தன்மை என்பது உயிர்ப்புள்ள இயற்கைத்தன்மையாகும். இது எப்பொழுதும் பிராண வாயுவினால் உயிரும் இயற்கை ஆகிறது. இச்சக்தியே புழுக்களின் உலகம் பறவை, மிருகம், இதனுடன் மனித குலத்திற்கும் சக்தியாக விளங்குகிறது. வயோதிகத்தன்மை சுருங்குகின்ற நிலை, அப்படியே அழுகும் தன்மை இவை அனைத்தும் உயிரின் விடுதலைக்கு வழி வகுக்கின்ற பாதையாகும். ஆகவே வயோதிகத்தை ஆராய்ச்சி செய்தல் வேண்டும். குறிப்பிட்டுச் சொன்னால் மரணம் நிகழு வதற்கு அழுகும் தன்மையின் ஆரம்பமே முதற்படியாகும்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




# கீதாசமையல்

சமையலுக்கு புதியவரா? சுவையான சமையல் சமைக்க விரும்புகிறீர்களா? கவலையே வேண்டாம், கீதாசமையல் YouTube சேனலை பாருங்கள் புதிய மற்றும் பாரம்பரிய சமையல் குறிப்புகளை அறிந்து கொண்டு வீட்டிலேயே சுவையான சமையலை செய்து மகிழுங்கள்




ஓட்டல் சுவையில் புதிய உணவுகளை சமைக்க தொடர்ந்து நமது YouTube சேனலை பாருங்கள்

பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்



# திருப்போரூர்

# கந்தசாமி கோவில்

முருகப்பெருமான் அசுரர்களை எதிர்த்து நிலம் ஆகாயம் கடல் ஆகிய மூன்று பகுதிகளில் நின்று போரிட்டு வெற்றி கண்டார். அசுரர்களின் கர்மத்தை நிலத்தில் நின்று போரிட்டு திருப்பரங் குன்றத்தில் முருகப்பெருமான் அடக்கி வெற்றி பெற்றார். அசுரர்களின் மாயையை கடலில் நின்று போரிட்டு திருச்செந்தூரிலே வெற்றி கண்டார். அசுரர்களின் ஆணவத்தை விண்ணில் நின்று போரிட்டு திருப்போரூரில் வெற்றி கொண்டார். முருகன் யுத்தம் புரிந்த இடம் ஆகையில் யுத்தபுரி என்று அக்காலத்தில் பெயர் பெற்றது.

சமராபுரி போரிநகர் என்ற வேறு பெயர்களும் இந்த இடத்திற்கு உண்டு. அசுரர்களுடன் முருகப்பெருமான் போரிட்டபோது மாய வித்தைகள் மூலம் மறைந்திருந்து அசுரர்கள் போர் புரிந்தனர். இதனை தனது ஞான திருஷ்டியாலும் பைரவரின் துணையோடும் கண்டறிந்த முருகப்பெருமான் அசுரர்களை சம்ஹாரம் செய்தார். மறைந்திருந்த அசுரர்கள் முருகப் பெருமானின் கண்களில் அகப் பட்ட இடமே கண்ணகப்பட்டு (கண் அகப்பட்டு) என்ற இடமாக திருப்போரூர் அருகில் உள்ளது.

இந்த ஊரில்தான் திருப்போரூர் கந்தசுவாமி திருக்கோயிலை நிர்மாணித்த மகான் சிதம்பர சுவாமிகளின் திருமடம் அமைந்துள்ளது. பல யுகங்களுக்கு முன்னால் நடந்த பிரளயத்தால் ஆறு முறை இங்கு உள்ள முருகன் கோவில் அழிவைச் சந்தித்து இருக்கிறது என்று கோவில் புராண வரலாறு உள்ளது. தற்போது ஏழாவது முறையாக மீனாட்சி அம்மனின் அருளாலும் முருகனின் அருளாலும் இக்கோவில் கட்டப்பட்டுள்ளது.

சிதம்பர சுவாமிகள் சாந்தலிங்க அடிகளின் மாணவர். இவர் மதுரையில் தியானத்தில் இருந்த போது அழகிய மயிலொன்று தோகை விரித்து ஆடு வதைக் கண்டு மகிழ்ந்தார். அப்போது தியா னத்தில் மீனாட்சி அம்மன் தோன்றி மதுரைக்கு வடக்கே காஞ்சிக்கு கிழக்கே வங்க கடலோரம் யுத்தபுரி என்னும் தலம் அமைந்துள்ளது அங்கே குமரக் கடவுளின் திருவுருவம் பனைமரக் காட்டிற் குள் புதையுண்டு கிடக்கிறது.

அதைக் கண்டெடுத்து அழகிய திருக்கோயில் நிர்மாணித்து முருகனை பிரதிஷ்டை செய்து வழிபட்டுவா. அந்த ஆலயத்துக்கு வந்து வழிபடு பவர்களுக்கு வாழ்வில் சகல நன்மைகளும் கிடைக்கும் என்று அருளி மறைந்தார். மதுரையில் இருந்து மீனாட்சி அம்மன் காட்டிய திசையில் பயணித்து தற்போது திருப்போரூர் என்று அழைக்கப்படும் இடத்தை அடைந்தார் சிதம்பர சுவாமிகள். அங்கு இருந்த பனை மரக்காட்டிற்குள் ஒரு வேம்படி விநாயகர் ஆலயம் இருந்தது.

அதன் அருகில் ஒரு பெண் பனைமரத்தின் அடியில் ஒரு பனை மரத்தில் செய்த பாத்திரத் தில் சுயம்பு மூர்த்தியாக கந்தப்பெருமான் காட்சியளிப்பதைக் கண்டு மகிழ்ந்தார். சுயம்பு முருகப்பெருமானை அங்குள்ள வேம்படி விநாயகர் கோயிலில் வைத்து பூஜைகள் செய்து வந்தார். ஒரு நாள் அந்த சுயம்பு



www.aanmeegamalar.com

வடிவ கந்தப்பெருமானின் உருவில் இருந்து முருகப்பெருமான் தோன்றி சிதம்பர சுவாமிகளின் நெற்றியில் திருநீறு அணிவித்து சிவாயநம என்று ஓதி மறைந்தார்.

அப்போது சிதம்பர சுவாமிகளுக்கு ஒரு கோயிலின் தோற்றமும் அதன் ஒவ்வொரு அங்கங்களும் துல்லியமாக மனத்திரையில் பதிந்தது. இது இறைவனின் திருவருள் இங்கே கோவில் கட்ட வேண்டும் இது இறைவன் ஆணை என்பதை உணர்ந்தவர் மனதில் தோன்றிய கோயில் தோற்றத்தையே ஆலயமாக எழுப்பும் விதத்தில் திருப்பணி ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினார்.

திருப்போரூர் பகுதியை அப்போது ஆட்சி செய்து வந்த ஆற்காடு நவாப் மன்னனின் மனைவி தீராத வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்தார். அவர்கள் சிதம்பர சுவாமிகளின் தெய்வீக சக்தியை உணர்ந்து இங்கு வந்தபோது சிதம்பர சுவாமிகள் நவாப் மனைவிக்கு திருநீறு பூச அவரது வயிற்று வலி நீங்கியது. மகிழ்ச்சி அடைந்த நவாப் திருப்போரூரில் சிதம்பர சுவாமிகள் எழுப்பும் முருகன் கோயிலுக்காக 650 ஏக்கர் நிலத்தை தானமாக வழங்கினார்.

முருகன் அருளால் தனது மனத்திரையில் தோன்றியபடியே அழகிய திருக்கோயிலை கட்டி முடித்தார் சிதம்பர சுவாமிகள். அதுவே இன்றைய திருப்போரூர் கந்தசுவாமி திருக்கோயில் ஆகும். கோவிலின் அருகில் இருந்த ஓடையை குளமாக மாற்றினார். இக்குளத்தில் இருக்கும் நீரானது இது வரை வற்றியது இல்லை. பனை மரத்தடியில் முருகன் இருந்த பனை பாத்திரத்தை தற்போதும் வைத்துள்ளனர். நைவேத்தியத்திற்கான அரிசியை




இதில்தான் வைத்துள்ளனர்.

கிழக்குப் பார்த்த ராஜகோபுரத்தை வணங்கி உள்ளே நுழைந்தால் கருவறையில் முருகப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். கந்தசுவாமி சுயம்பு மூர்த்தியாக இருப்பதால் இவருக்கு அபிஷேகம் கிடையாது. பிரதான பூஜைகள் அனைத்தும் ஆமை வடிவத்தின் மேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள சுப்பிரமணியர் யந்திரத்திற்கே நடைபெறுகிறது. இந்த யந்திரத்தில் முருகனின் 300 திருப்பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. முருகனுக்கு பூஜை நடந்தபின் இந்த யந்திரத்திற்கு அபிஷேகங்கள் பூஜைகள் நடக்கும். பிரம்மாவைப் போல் அவருக்குரிய

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்




அட்சர மாலை மற்றும் கண்டிகையும் சிவனைப் போல் வலது கையால் ஆசிர்வதிக்கும் அபயஹஸ்த முத்திரையும் பெருமாளைப் போல் இடது கையை தொடையில் வைத்து ஊருஹஸ்த முத்திரையும் என மும்மூர்த்திகளின் அம்சமாக கந்தசாமி முருகன் அருள்பாலிக்கிறார். சுவாமிக்கு எதிரே ஐராவதம் (வெள்ளையானை) வாகனமாக உள்ளது. இந்த கோயிலின் தல மரம் வன்னி மரம் ஆகும். கோவிலின் தெற்கே உள்ள குளத்தின் பெயர் வள்ளையார் ஓடை என்னும் சரவணப் பொய்கை ஆகும்.

கோவிலில் சம்ஹார முத்துக்குமார சுவாமியின் திருவடிவம் வலது காலை மயில் மேல் ஊன்றி வில்லேந்திய திருக் கோலத்தில் உள்ளார். கோவில் வெளிப்பிரகாரத்தில் விநாயகர் சன்னிதிக்கு அருகில் சனீஸ்வரர் தனிச்சன்னிதியில் எழுந்தருளி உள்ளார். இக்கோயி லில் பைரவர் நாய் வாகனம் இல்லாமல் தனிச் சன்னிதியில் மூலவர் கந்தசுவாமியை பார்த்த வண்ணம் உள்ளார். கொடிமரம் கோபுரத் திற்கு வெளியே இருக்கிறது. வள்ளி தெய்வானைக்கு தனித்தனி சன்னதிகள் உள்ளன. முருகன் சன்னதி கோஷ்டத்தில் பிரம்மாவின் இடத்தில் பிரம்ம சாஸ்தா (முருகனின் ஒரு வடிவம்) இருக்கிறார். இங்கு நவக்கிரக சன்னதி கிடையாது. முருகன் சன்னதி சுற்றுச்சுவரில் முருகரது ஒரு வடிவமான குக்குடாப் தஜர் (குக்குடம் என்றால் சேவல்) சிலை உள்ளது. ஒரு கையில் சேவல் வைத்திருப்பதால் இவ ருக்கு இப்பெயர் ஏற்பட்டது.






கையில் வில்லேந்தி மயில்மேல் காலை வைத்த படி சம்ஹார முத்துக்குமார சுவாமிக்கும் இங்கு சிலை உள்ளது. கோயில் பிரகாரத்தில் வான்மீக நாதர் சிவலிங்க சன்னதி உள்ளது. இவருக்கு துணைவியான அம்பாள் பக்தர்களுக்கு புண் ணியம் கிடைக்க காரணமாக இருப்பதால் இவருக்கான புண்ணிய காரணியம்மன் என்று பெயர். ஓம்கார அமைப்பில் அமைந்த இக்கோயில் சுவாமியை தரிசித்துவிட்டு வெளியேறும்போது சன்னதியிலிருந்து பார்த்தால் முன்னால் செல் பவர்களின் முதுகு தெரியாதபடி நுட்பமாக கட்டப் பட்டுள்ளது.

முருகனைப் போற்றி சிதம்பர சுவாமிகள் 726 பாடல்கள் பாடினார். தனது குருவான சாந்தலிங்க அடிகளின் நூல்களுக்கு உரைகள் எழுதி உள்ளார்.

உபதேச உண்மை உபதேசக் கட்டளை திருப்போரூர் சந்நிதி முறை தோத்திர மாலை திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம் முதலியனவும் திருப்போரூர் முருகன் மீது கிளிப்பாட்டு குயில் பாட்டு தாலாட்டு திருப்பள்ளிஎழுச்சி ஊசல்தூது என பல பாடல்கள் பாடியுள்ளார்.

இவருக்கு கோவிலுக்குள் சன்னதி உள்ளது. வைகாசி விசாகத்தன்று இவருக்கு குருபூஜை வைபவம் நடக்கும். கோவிலின் சாலையின் மறுபுறமுள்ள பிரணவ மலை என்றும் சிவன் மலை என்றும் அழைக்கப்படும் சிறு குன்றின் மேல் அருள்மிகு கைலாசநாதர் பாலாம்பிகை கோவிலை வடிவமைத்த சிதம்பர சுவாமிகள் அந்த கோவிலின் பிரகாரத்தில் பாதாளத்தில் சுரங்கபாதை அமைத்து அதில் சமாதி அடைந்தார்.

அருணகிரிநாதர் திருப்புகழில் இத்தலம் பற்றி பாடல் பாடியுள்ளார். அவர் கந்தசுவாமியை சகல வேதங்களின் வடிவம் எனக் குறிப்பிட்டுள்ளார். இதனால் சுவாமிக்கு வேதஉச்சியாக சுவாமி என்றும் பெயருண்டு.

அனைத்து வேதங்களுக்கும் தலைமையாக இருப்பவர் என்பது இதன்பொருள். கந்தசஷ்டி விழா இங்கு விசேஷமாக நடக்கும்.

இவ்வேளையில் கஜமுகன் பானுகோபன் சிங்கமுகன் சூரபத்மன் அஜமுகி தாரகன் ஆகிய அசுரர்களை வதம் செய்வார். மாசி பிரம்மோற் ஸவத்தின் போது முருகன் பிரம்மாவிற்கு பிரணவ உபதேசம் செய்யும் வைபவம் நடக்கும். முருகன் வாய் மீது கை வைத்துள்ள சிவனின் மடியில் அமர்ந்து உபதேசம் செய்யும் சிலையும் இங்குள்ளது.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# சிறு தோஷத்தால் திருமண தடையா?

## தீர்வு தரும் மார்கழி மாத கோலம்




பெண்ணை எதற்கும் ஒப்பிட முடியாத ஓர் உயரிய இடத்தில் வைத்துள்ளது நம் சாஸ்திரங்களும் வேதங்களும். ஒரு பெண் 6 விதமான தன்மைகளைக் கொண்டவள். அவளே தெய்வமாகவும், மனைவியாகவும், குருவாகவும், நண்பனாகவும், ஆசானாகவும், போதகனாகவும் (செயல்திறன்) ஒரு ஆணுக்கு அமைகின்றாள். அந்தப் பெண்ணின் ஆரோக்கியம் நன்றாக இருந்தால்தான் ஒவ்வொரு குடும்பமும் ஆரோக்கியமாக இருக்கும். ஆகவேதான் பெரும்பாலான விரதங்களில் பெண்களின் பங்கு அதிகம் உள்ளது.

குறிப்பாக மார்கழி விரதம் பெண்களுக்கான விரத மாதமாகவே போற்றியுள்ளனர் நம் முன்னோர்கள். 'மார்கழியில விரதம் இருந்தா மனசு நிறைஞ்ச மணாளன் கிடைப்பான்' என்ற கருத்தை வைத்து அனைத்து இளம்பருவப் பெண்களும் இவ்விரத மாதத்தை கடைபிடிக்கவைத்துள்ளனர் நம் முன்னோர்கள்.

"ஆடியில் அம்மனும், புரட்டாசியில் பெருமாளும், மார்கழியில் அனைத்து தெய்வங்களும் என, மாதத்துக்கு ஒரு தெய்வத்தை வழிபட வகுத்துள்ளார்கள் நம் முன்னோர். ஏனெனில், ஆடியில் பலமுள்ள காற்று வீசும். அப்படி வீசும் காற்று விஷக்காற்று என்பதால், மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே வந்து அம்மன் கோயில்களில் உள்ள கிருமிநாசினியான வேப்பிலையின் மணத்தை சுவாசிக்கும் போது, விஷக்காற்று முறியடிக்கப்படுவதுடன், இயற்கையான ஆக்சிஜனும் கிடைக்கிறது.

இதே புரட்டாசி மழைக்காலம் என்பதால் மக்கள் தங்கள் வீடுகளிலேயே அப்போது கிடைக்கும் சத்து மிகுந்த காய்கறிகளைப் படைத்து பெருமாளை வழிபடுகிறார்கள். இம்மாதத்தில் காய்கறிகளின் சத்தும், துளசி தீர்த்தமும் நம் உடலுக்குத் தேவையான ஆரோக்கியத்தைத் தருகிறது.




இதே போல் மார்கழி மாதத்தின் அதிகாலையில், ஓஸோன் படலம் வழி, ஆரோக்கியமான, உடல் நலனைத் தரும் காற்று அதிகம் பூமியில் இறங்கும். இது நம் வியாதிகளைக் கட்டுப்படுத்தும் என்பதால் தான் மார்கழி அதிகாலையில் பெண்கள் எழுந்து சாணம் தெளித்து கோலமிட வேண்டும் என முன்னோர்கள் கூறினர்.

நம் உடலில் 80% ஆக்சிஜனும் 20% கரியமில வாயுவும் இருக்க வேண்டும். தவறான பழக்க வழக்கங்களால் கூடுதலாகி விட்ட விஷவாயுவான கார்பன்டை ஆக்ஸைடை விரட்டி ஆக்சிஜனை நம் உடல் பெறுவதால் வெள்ளை அணுக்கள் இரத்தத்தில் பெருகி நோய் எதிர்ப்பு சக்தி உரு வாகிறது. இந்த நல்ல வாயுவை சுவாசிக்கும் பொருட்டே அதிகாலை மார்கழியில் எழுவது என்பதை தெய்வத்தின் பெயரால் கட்டாயப்படுத்தி வைத்துள்ளனர் நம் முன்னோர்கள்."




## கோலம்போட்டால் தோஷம் தீரும்

மனிதர்கள் அறிந்து செய்யும் தவறு கள் ஒரு பக்கம், அறியாமல் செய்யும் தவறுகள் மறுபக்கம். நடக்கும் போது நம் காலடிபட்டு எறும்பு, பூச்சி போன்ற எத்தனை உயிர்கள் சாகின்றன? இதுவும் ஒருவகை பாவம்தானே? இதனால் எழும் தோஷத்தினால் கன்னிப் பெண்களுக்கு திருமணத்தில் தடை வரும். இதைத் தவிர்க்கவே பெண்கள் வாசலில் அரிசி மாவினால் கோலம் போடும் பழக்கம் ஏற்படுத்தப்பட்டது.

கடும் குளிர் மற்றும் மழையினால் உணவுக்கு வழியின்றி இரவு முழுவதும் அடைந்து கிடக்கும் சிறு உயிரினங்கள், அதிகாலையில் வெளிவந்து தமக்குத் தேவையான உணவாக அரிசி மாவைத் தேடி வந்து உண்ணும். அந்த உணவினை சிறு உயிரினங்களுக்கு அளித்த பெண்களுக்கு, ஏற்படும் சிறு சிறு தோஷங்கள் அகலும்.

இதனால்தான் மார்கழி தோறும் வீடுகளில் கோலம் போடுவதை வழக்கமாக கொண்டிருந்தனர், இந்த கோலத்திற்கு பெரும்பாலும் அரிசி மாவைப் பயன்படுத்தினால்தான் புண்ணியம் கிடைக்கும்,ஆனால் தற்போது, கோலம்போடுவது அழகுக்காகவும் ஆடம்பரத்துக் காகவும் கெமிக்கல் பொருட்களை பயன்படுத்துகின்றனர். இது முற்றிலும் தவறாகும்.

## கோலத்தில் சாணம் ஏன்?

பசு மாட்டின் சாணம் அற்புத பலன்களைத் தரும் ஒப்பற்ற




கிருமிநாசினி என்பது உலகளவில் பல அறிவியல் வல்லுநர்களும் ஒப்புக்கொண்ட உண்மை.

தற்காலத்தில் கொரானா போன்ற கொடிய கிருமிகளுக்கு கூட பசுஞ்சாணி எதிரி யாகவே செயல்படுகிறது.

இதுபோன்று பனிக்காலமான மார்கழியில் நம் வீட்டைச் சுற்றிப் பரவியிருக்கும் பாக்டீரியாவை அழிக்கும் சக்தி கொண்டது பசுஞ் சாணம். கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியாக்களினால் நோய்த் தொற்றுகள் ஏற்படும். இதைத் தவிர்க்கவே சாணத்தில் மகாலட்சுமி உறைவதாகவும், சாணப் பிள்ளையார் பிடித்து வைத்தால் நல்லது என்றும் கூறி வாசலில் சாணத்தைக் கரைத்துத் தெளிப்பதை பழக்கமாக்கினர் நம் முன்னோர்கள்."

இப்படி ஒன்றுக்கொன்று தொடர்புடைய நல்ல விஷயங்கள் அடங்கிய மார்கழி மாதக் கோலங்களால் பெண்களின் கற்பனைத் திறன் வளர்வதுடன் காசு தராமலேயே யோகாவை செய்த பலனும் கிட்டும். ஒருமுக சிந்தனை ஏற்பட்டு அறிவும் கூர்மையாகும்.

## திருமண யோகம் தரும் பாவை நோன்பு

ஆண்டாள் மார்கழி மாதத்தில் தினம் ஒரு பாசுரமாகப் பாடிச் சென்று, தான் மட்டும் பெருமாளைப் பார்த்து பலன் அடையக் கூடாது என்று, தன் தெருவிலிருந்த கன்னிப் பெண்கள், குழந்தை இல்லாதவர்கள் என எல்லாத் தரப்பு பெண்களையும் தன்னுடன் அழைத்துச் சென்று, தன் மனம் கவர்ந்த கண்ணனின் முன் நின்று 'நீயே என் கணவனாக வர வேண்டும்' என்று வழிபடுகிறாள்.

அதோடு ஆண்டாளுடன் சென்ற பெண்களும் கண்ணனுடன் ஐக்கியமாகி தாங்கள் நினைத்ததை அடைகின்றனர்.

இவ்வாறு அதிகாலை எழுந்து ஒரு மனதுடன் தனக்குச் சிறந்த கணவன் கிடைக்க வேண்டும் என்ற ஆழ் மனது நம்பிக்கையுடன், பரிசுத்தமான காற்றை சுவாசித்து விரதம் மேற்கொள்ளும் போது அப்பெண்ணிடமிருந்த எதிர்மறை எண்ணங்கள் விலகி, மன ஆரோக்கியம் மேம்பட்டு அவள் நினைத்த காரியம் கைகூடும். அதாவது நல்ல கணவனை அடையும் வழி கிடைக்கும்.

ஆன்மிகமலர்
ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...
ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share

# முதலுதவிப் பெட்டியான திருஷ்டிப் பெட்டகம்




நம் முன்னோர்களின் பல அறிவியல் சார்ந்த செயல்கள் மூடநம்பிக்கையாக சித்தரிக்கப்பட்டு, இன்று நாமும் அதை மூடநம்பிக்கை என்றே என்ன தொடக்கி விட்டோம். அதில் ஒன்றுதான் பல வீட்டு வாசல்களில் தொங்கிக்கொண்டு இருக்கும் எலுமிச்சை பழமும், மிளகாயும்.

பெரும்பாலான மக்கள் இதை வீட்டு வாசலில் தொங்க விட்டால் கண்திருஷ்டி நீங்கும் என்று நினைத்து தொங்கவிடுகிறார்கள். அனால் நம் முன்னோர்கள் எலுமிச்சையையும், மிளகாயையும், தேங்காயையும் வீட்டு வாசலில் தொங்கவிட்டதற்கு, ஒரு மிகபெரிய அறிவியல் ஒளிந்துள்ளது.

நம் முன்னோர்கள் வாழ்ந்த காலத்தில் மின்சாரம் எல்லாம் கிடையாது. இரவு நேரங்களில் அவர்கள் வெளியே செல்ல வேண்டும் என்றால், ஒரு சிறு விளக்கின் உதவியோடு தான் வெளியே செல்வார்கள். பல நேரங்களில் விளக்கு இல்லமாலும் கூட செல்வார்கள்.

அப்படி இருளில் செல்லும் போது, அவர்களை ஏதேனும் விஷபூச்சியோ, அல்லது விஷப்பாம்பு கடித்தால், அவர்களுக்கு முதலுதவி என்பது அவசிய தேவை.




அப்படிப்பட்ட பதற்றமான சூழ்நிலையில், அவர்களது வீட்டு வாசலில் தொங்கிக்கொண்டு இருக்கும் எலுமிச்சையும், மிளகாயும் தான் அவர்களுக்கு முதலுதவி பெட்டகமாக செயல் பட்டது.

கையிலோ அல்லது காலிலோ அடிபட்டிருந்தால் முதலில் எலுமிச்சை, மிளகாய் போன்றவை தொங்கி கொண்டு இருக்கும் கையிற்றை அவிழ்த்து மிளகாயை கடிபட்ட இடத்திற்கு சற்று மேலே இருக்கமாக கட்டிவிடுவார்கள்.

இதனால் விஷம் தலைக்கு ஏறாமல் இருக்கும். அதன் பிறகு அது விச பூச்சிகளின் கடியா அல்லது சாதாரண பூச்சிகளின் கடியா எனபதை அறிய மிளகாயை எடுத்து கடித்து பார்த்தால் தெரிந்து விடும்.

மிளகாயின் காரம் தெறியவில்லை என்றால், அது விச பூச்சிகளின் கடி என்றும், காரம் தெறிந்தால் அது சாதாரண விச பூச்சியின் கடி என்றும் அறிவார்கள்.

கடிப்பட்டதால் உண்டாமும் களைப்பை போக்குவதற்காக, எலுமிச்சை சாரை நன்கு பிழிந்து பருக கொடுப்பார்கள். இதனால் அவர்களுக்கு உடனடி எனர்ஜி கிடைக்கும். கடிபட்ட இடத்தில் எரிச்சல் இருந்தால். அதை குறைக்க, படிகாரத்தை வைத்து தேய்ப்பார்கள்.

எலுமிச்சை, தேங்காய் உள்ளிட்ட பொருட்களில் தடவப்பட்டு இருக்கும் மஞ்சளை எடுத்து அதை கடிபட்ட இடத்தில் பூசி விடுவார்கள். இதனால் கடிபட்ட இடத்தில் ஏதேனும் கிருமிகள் இருந்தால், அது அழிந்து விடும்.

எட்டுகால் பூச்சிகள் போன்றவைகள் கடித்து இருந்தால், தேங்காய் தண்ணீரையும், தேங்காய் கீற்றையும், உன்னச்சொல்வார்கள். இதனால் விச முறிவு ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம்.

இப்படியாக விச கடிகளுக்கு முதலுதவி பெட்டகமாக விளங்கிய பச்சை மிளகாய், எலுமிச்சை, தேங்காய் படிகாரம் போன்றவைகளை தான் நாம் திருஷ்டி என்று வீட்டில் கட்டி தொங்கவிட்டு கொண்டிருக்கிறோம்.

இனிமேலாவது இதுபோன்றவைகளை முதலுதவி பெட்டகமாக பயன்படுத்துவோம். நம் முன்னோர்களின் அறிவியலை மூடநம்பிகையாக பார்க்காமல் அறிவியலாய் பார்ப்போம்.

– அர்த்தமுள்ள இந்துமதம்

# நேரத்தை கூறும் சிதம்பரம் நாழிகை மணி

சிவபெருமான் அருவம் உருவம் அருவுருவம் என இந்த மூன்று வடிவங்களிலும் அருள்புரியும் தலம் சிதம்பரம். மூலவர் திருமூலநாதர் அரு உருவம் ஆக லிங்க வடிவிலும், நடராஜர் உருவம் வடிவிலும், சிதம்பர ரகசியம் என்ற வெட்ட வெளியில் அருவம் நிலையிலும் அருள்புரிகிறார். ஏனைய கோவில்களில் பூஜையின் போது மட்டுமே மணி அடிப்பது வழக்கம். ஆனால் சிதம்பரம் நடராஜர் கோவிலில் நேரத்தை அறிவிக்கும் விதமாக ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு முறை மணி அடிக்கின்றனர். இதனை நாழிகை மணி என்று அழைக்கிறார்கள்.

சிதம்பரத்தை நடராஜர் கோவில் என்று குறிப்பிட்டாலும் இங்குள்ள மூலவர் ஆதிமூல நாதர் என்னும் பெயரில் லிங்க வடிவில் அருள்புரிகிறார். கைலாய நாதரான சிவபெருமானின் நடனத்தை பூலோக மக்களும் தரிசிக்க விரும்பிய பதஞ்சலி, வியாக்ரபாத முனிவர்கள் தில்லைவனமான இத் தலத்தில் ஆதிமூல நாதரை நோக்கி தவமிருந்தனர். அம்முனிவர்களின் வேண்டுதலை ஏற்ற




சிவபெருமான் தைப்பூச நந்நாளில் உச்சிப் பொழுதில் திரிசக்ர முனிவர்கள் என்னும் தில்லைவாழ் அந்தணர்களுடன் எழுந்தருளி நடன தரிசனம் அளித்தார்.

இதைவிட சிறப்பாக யாரும் நடனமாட முடியாது என்பதால் ஆடலரசன் என்னும் பொருளில் நடராஜர் எனப் பெயர் பெற்றார். இந் நடனத்தை பார்வதிதேவியும் நின்று ரசித்துப் பார்த்தாள். இதனால் இவள் சிவகாமி என்று போற்றப்பட்டாள்.

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**

இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com



# ஆன்மீக வழியில் அமைதி

செல்வந்தர் தான் நன்கொடை கொடுப்பது பற்றி ஆன்மீக வழியில் சிந்தித்து மனைவியிடம் 'நீ சொல்வதுபோல் அவர்கள் என்னை ஏமாற்றுகிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். நான் நூறு பேருக்கு கோவிலுக்கு என்று நன்கொடை கொடுத்தாலும் அதில் என்னை ஏமாற்றுகிறவர்கள் தொண்ணூறு பேர் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். என்னை ஏமாற்றுபவர்களை பற்றி எந்தவிதமான கவலையும் எனக்கு இல்லை. நூறு நபர்களில் பத்துப்பேர்கள் நான் கொடுக்கும் நன்கொடையை பயனுள்ள வகையில் நன்கு முறையாக கோவில் பணிக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பது எனக்குத் தெரியும். இதில் என்னை ஏமாற்றுபவர்கள் தொண்ணூறு பேர்கள் இருந்தாலும், நான் கொடுக்கும் நன்கொடையை நேர்மையான முறையில் பயன்படுத்தி உண்மையுடன் தொண்டு செய்யும் தகுதியுள்ள அந்த பத்து நபர்களை இழப்பதற்கு நான் விரும்பவில்லை. அவர்கள் மீது உள்ள நம்பிக்கையைப் பற்றி தெளிவாக தன் மனைவியிடம் அவர் விளக்கிக் கூறினார்.

நம் மீது முழு நம்பிக்கையுடன் இருப்பவர்கள் மீது நம்பிக்கை வைக்காமல் இருப்பது நமக்கு ஒருவிதமான இழப்பு ஆகும். நம்பிக்கையுள்ள நண்பர்கள் உறவினர்கள் ஆகியோர்கள் மீது நாம் நம்பிக்கை கொள்ளாமல் இருக்கக்கூடாது. அவ்வாறு நம்பிக்கை இல்லாமல் இருப்பது நமது வாழ்க்கையில் ஏற்படக்கூடிய மிகப் பெரிய இழப்பாகும் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். நாம் ஒருவர் மீது நம்பிக்கை கொண்டு அவர்களிடம் நம்பிக்கையுடன் நடந்து கொண்டாலும், அவர்கள் நமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தாலும் அவர்களால் நமக்கு முழுமையான அழிவை இழப்பை நமக்கு கொடுத்து விடாது என்பதை மனதில் பதிந்து வைத்துக்கொள்ள வேண்டும். நம்பினோர் கெடுவதில்லை நான்குமறைத் தீர்ப்பு என்பதுபோல் ஒருவர் மீது நாம் கொள்ளும் முழுமையான நம்பிக்கையானது எக்காலத்திலும் நமக்கு கெடுதல் ஏதும் நேர்ந்து விடாது என்பதை மனதில் பதிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.




உலகில் தன்னைத் தவிர மற்றவர்கள் அனைவரும் நம்பிக்கை இல்லாதவர்கள் என்று நினைப்பது இது தவறான முடிவாகும். நம்பிக்கையானவர்கள் என்று நாம் நம்பிக்கொண்டிருந்தவர்கள் நமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தவர்கள் பற்றி நாள்தோறும் நினைத்துக் கொண்டிருந்தால் நாம் மன அமைதியைத்தான் இழக்க நேரிடும். நமக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யும் துரோகிகளை பற்றி நினைத்து கவலைப்படாமல் இருக்க வேண்டும். அதேபோல் நமக்கு நம்பிக்கையானவர்களில் ஒருவரைக்கூட நாம் எந்த நிலையிலும் இழந்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும். நமது வாழ்வில் நம்பிக்கையான ஒருவரை இழப்பதன் மூலம் நாம்தான் பாதிப்பு அடைவோம். அதனால் நம்மையும் அறியாமல் மன அமைதியையும் இழக்க நேரிடும் என்பதை புரிந்து கொள்ளவேண்டும். நாம் நம்பிக்கை இல்லாதவர்கள் மீது அவர்களைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்ளாமல் நம்பிக்கை வைப்பதால் நாம் எந்தவிதத்திலும் கெட்டுவிடப் போவதில்லை.

ஆன்மீகத்தில் குரு கூறிய அனைத்தையும் சீடன் கண்ணை மூடிக்கொண்டு நம்ப வேண்டும் என்பது கட்டாயமல்ல. எடுத்துக்காட்டாக குருவானவர் கையை மூடிக்கொண்டு சீடனிடம் தன்னோட உள்ளங்கையில் ஒரு பூனைக்குட்டியை மறைத்து வைத்துள்ளேன் என்று கூறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். குரு கூறியதுபோல் உள்ளங்கையில் பூனையை மறைத்து வைத்துக் கொள்ள முடியாது என்பது சீடனுக்கு நன்றாகத் தெரியும்.

குரு சொல்லிவிட்டாரே என்று எண்ணிக்கொண்டு அதனை சீடன் நம்ப வேண்டியதில்லை. சீடன் அதனை ஏற்றுக்கொள்ளவும் வேண்டியதில்லை. அதனை

குரு ஒரு நகைச்சுவை நோக்குடன்கூட சொல்லியிருக்கலாம் என்று சீடன் நினைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல் குருவின் வார்த்தைகளை தத்துவங்களை சீடன் முழுமையாக மறுத்து விடவும் கூடாது. அதுதான் குருவின்மீது சீடன் வைத்திருக்கும் ஆழ்ந்த குரு பக்தியாகும்.

ஒரு விவசாயி தன்னோட கஷ்டங்களை குருவிடம் கூறி ஆறுதல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் வருகிறான். அப்போது குருவானவர் அந்த விவசாயியைப் பார்த்தவுடன் நீ ஆனந்த சொரூபியாக இருக்கிறாய் என்று சொன்னால் அப்போது அந்த விவசாயின் மனநிலை எப்படியிருக்கும். அவன் கஷ்டப்பட்டு குருவிடம் ஆறுதல் தேடி வந்திருக்கிறான். அவனுக்கு ஆறுதல் கூறாமல் இவ்வாறு குரு விவசாயிடம் கூறுவதைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும்.

குரு சொல்வதை நாம் முழுமையாக நம்பாமல் இருக்கக் கூடாது. அவர் அவ்வாறு கூறினால் குருவின் வார்த்தையில் ஏதோ ஒரு நுட்பமான தத்துவம் அடங்கி இருக்கிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். குரு கூறிய வார்த்தைகள் தத்துவம் நமக்கு புரியாமல் உள்ளது என்று நமக்குள் நினைத்துக் கொண்டு, குருவின் வார்த்தைகளின் மீது நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதற்குப் பெயர்தான் சிரத்தை அல்லது நம்பிக்கை ஆகும்.

குரு கூறுவதை சீடன் தெளிவாகப் புரிந்து கொள்ளாமல் அவர் வார்த்தைகளின் மீது நம்பிக்கை கொள்ளாமல், யோசிக்காமல் அவரிடம் புரியவில்லை என்று அவசரப்பட்டு மறுத்து விடக்கூடாது. அவ்வாறு மறுத்தால் ஆன்மீக வழியில் அது தாமசமான சிரத்தை என்று கூறுகிறது. எனவே குருவின் வார்த்தைகளில் தற்சமயம் சீடனுக்குப் புரியவில்லை. நாளடைவில் அதன் உண்மை நிலை சீடனுக்குப் புரிந்து விடும். அவ்வாறு நாளடைவில் புரிந்துகொள்ள முடியும் என்ற நம்பிக்கையுடன் குருவின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்துக்கொள்ள வேண்டும்.

குருவானவர் தன்னோட சீடர்களிடம் சத்தியத்தை கடைபிடி அகிம்சையுடன் இருக்க வேண்டும் என்று போதிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். சீடன் உடனே இதெல்லாம் தனது வாழ்க்கைக்கு சரிப்பட்டு வராது என்று குருவிடம் உடனே மறுத்து விடக்கூடாது. சீடன் சத்தியத்தையும் அகிம்சையையும் கடைபிடித்தால் கஷ்டங்கள் இடர்பாடுகள் எல்லாம் வரும் என்று சீடனுக்குத் தெரிய வருவதால் அவனை அறியாமல் குருவின் வார்த்தைகளை அப்போது மறுப்பதற்குத் தோன்றும். அவ்வாறு மறுக்காமல் சீடன் கடைப்பிடித்து குருவின் மீது நம்பிக்கை, அவர் வார்த்தைகள் மீது நம்பிக்கை வைக்கவேண்டும். இதுதான் சீடனது சாத்வீக சிரத்தையாகும்.

நமக்கு ஞானம் வருவதற்கு இந்த நம்பிக்கையானது ஓர் பாலமாக துணை புரிகிறது. ஆரோக்கியமான மனம், உறுதியான மனம், ஞானத்தினை உள்வாங்கும் மனம் என்ற நிலைகளில் சிரத்தை நமக்கு துணை புரிகிறது. ஆன்மீக வழியில் ஞானத்தினை அடைவதற்கு நம்பிக்கைதான் முதலிடம் பெறுகிறது. நமக்கு ஞானம் வரும் வரை நாம் பொறுமையாக குரு கூறிய வார்த்தைகளில் தத்துவங்களில் நம்பிக்கை கொள்ள வேண்டும். குருவின் வார்த்தைகளில் நம்பிக்கை வரும் வரை அவற்றின் நுட்பங்களை அறிந்து கொள்வதற்கு ஆன்மீக வழியில் முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதற்கு நமக்கு பொறுமை சிரத்தை போன்றவை அவசியம் வேண்டும்.

நமக்கு ஞானம் இருந்தாலே குருவின்மீது நம்பிக்கை, அவர் கூறும் வார்த்தைகளில் தத்துவங்களின் மீது நம்பிக்கை இயல்பாகவே வந்து விடும். அதேபோல் அமைதியும் நம்மையறியாமல் ஆன்மீக வழியில் இயல்பாகவே வந்து விடும் என்பதை அனுபவத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். பொதுவாக எல்லாருடைய மனதிலும் ஒருவர் உண்மையை கூறினாலும் அவன் உண்மைதான் கூறுகிறானா? அல்லது பொய் கூறுகிறானா? என்று நமது மனது நம்மை அறியாமல் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

எனவே நமது மனது எவரையும் எளிதில் நம்பாமல் யார் நல்லது கூறினாலும் நம்பாமல் இருக்கிறது. இத்தகைய மனநிலையை நாம் ஆன்மீக வழியில் சென்று நமது மனதை மாற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு மனது மாறினால்தான் வாழ்க்கையில் நாம் தேடும் விரும்பும் மனஅமைதி கிடைக்கும். இதற்கு புராணக் கதைகள் இதிகாசங்கள் போன்றவை எத்தனையோ ஆன்மீக வழியில் பல்வேறு வழிமுறைகளைக் காட்டுகிறது.

உலகில் யாரையும் நம்பாமல் இருப்பது சிலருக்கு ஒரு மனநோயாகவே உருவெடுத்து விடுகிறது. அதனால் அவர்களது மனம் நிம்மதியற்ற நிலை உருவாகிறது. பொதுவாகவே நமது மனமானது இயல்பாகவே யாரையும் எளிதில் நம்புவதில்லை. எனவே நாம் மனதளவில் அனைவரையும் நம்பவேண்டும் என்ற நல்ல பண்பினை ஆன்மீக வழியில் முயற்சி செய்து வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கும்.

மனம் யாரையும் நம்புவதற்கு மறுத்தாலும் அதனை அதன் போக்கில் விட்டுவிடாமல் நம்பிக்கையை வளர்ப்பதற்கு சிரத்தை எடுக்க வேண்டும். அப்படி நாம் அனைவரிடமும் நம்பிக்கை வைத்தால், அதனால் நமக்கு என்ன பயன் என்று சிந்தித்துப் பார்த்தால், அவர்கள் நம்மிடம் தவறு செய்வதற்கு அஞ்சுவார்கள். மேலும் அவர்கள் தங்களையும் அறியாமல்கூட நமக்கு

நம்பிக்கைத் துரோகமோ கெடுதலோ செய்வதற்கு தங்கள் மனதில்கூட இடம் தரமாட்டார்கள். இதனைதான் நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு என்று ஆன்மிகம் கூறுகிறது.

உலகில் புதிதாக கண்டுபிடித்து வரப்பட்டுள்ள மருந்தின்மீது மருத்துவர் ஒருவர் அவரையும் அறியாமலே நம்பிக்கை வைத்து விடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த மருந்தினை நம்பிக்கையுடன் நோயாளிகளுக்கு கொடுத்து சிறிது காலம் வரை நோய் குணமாகி அவர்களுக்கு நன்மையாகவே இருந்து இருக்கும். அதே மருந்து நாளடைவில் நோயாளிகளின் நோயைக் குணப்படுத்தாமல் போய்விடுகிறது. இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்ததில், அந்த மருத்துவர், புதிதாக கண்டுபிடித்த மருந்தின் மீது ஆரம்பத்தில் நம்பிக்கை வைத்ததுதான் நோய் குணமாவதற்கு முக்கிய காரணம் என்று தெரிவித்தார்கள்.

இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றல் ஒருவர் மீதோ ஒரு பொருளின் மீதோ நம்பிக்கை கொள்ளும் பண்பு மிகவும் சக்தி படைத்தது என்பதை உணர்ந்து கொள்ளலாம். அதே மருத்துவர் அதே மருந்தை நோயாளிகளுக்குக் கொடுத்தபோது சிலருக்கு நோய் குணமாகவில்லை என்று தெரிந்தவுடன், மருத்துவர் அந்த மருந்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையின்மையே முக்கிய காரணம் என்று தெரிந்ததாம்.

பிறரிடம் நாம் ஏமாற்றம் அடைவதால் நமக்கு சிரத்தையில் கவனம் வரவேண்டுமே தவிர நம்பிக்கையில் உறுதியில்லாமல் இருக்கக்கூடாது. அனைத்து மதங்களிலும் உள்ள தத்துவங்கள் கோட்பாடுகள் எல்லாம் கடவுளிடமிருந்து வந்தது என்றுதான் கூறப்படுகிறது. காரணம் மனிதனிடமிருந்து தத்துவங்கள் கோட்பாடுகள் எல்லாம் வந்தது என்றால் மக்களுக்கு அவற்றின்மீது முழு நம்பிக்கை எளிதில் வந்து விடுவதில்லை.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

ரிஷிகள் அவர்கள் வாழ்ந்த காலத்திற்கு ஏற்றார்போல் மந்திரங்கள் பழக்கங்கள் வழக்கங் களை எழுதியிருப்பார்கள் என்றுகூட சிலரால் நினைக்கத் தோன்றும். அவ்வாறு மனதில் நினைத்துவிடாமல் புராணங்கள் இதிகாசங்கள் உபநிடதங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் அனைத்தும் இறைவனிடமிருந்துதான் வந்தது என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். அவ்வாறு நம்பிக்கை கொள்ளும்போது, தத்துவங்கள் கோட்பாடுகள் மீதும் நம்பிக்கையில் ஒரு உறுதி நிலை தானாகவே நமக்கு வந்து விடும். குருவிடமிருந்து வரக்கூடிய வார்த்தைகள் மந்திரங்கள் ஈஸ்வனிடமிருந்து வரப்பட்டது என்று பாவனை செய்து கொள்ளவேண்டும். அவ்வாறு இருந்தால் குரு கூறும் தத்துவங்கள் சாஸ்திரக்கோட்பாடுகள் மீது சீடனுக்கு நம்பிக்கை இயல்பாக வளரும். நம்பிக்கை என்ற நல்ல பண்பு நம்மிடம் வளர்வதற்கு நாம் என்ன செய்யவேண்டும். அனைத்து மதங்களின் கொள்கைகள் தத்துவங்கள் கோட்பாடுகள் கடவுளிடமிருந்து வரப்பட்டுள்ளது. இதனை ரிஷிகள் முனிவர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் உலக மக்களுக்கு தங்கள் கருத்துக்களை வேதங்கள் உபநிடதங்கள் இதிகாசங்கள் மூலம் தெரிவித்துள்ளார்கள். அதன் மீது நமக்கு முழு நம்பிக்கை வர வேண்டும். அதற்கு நாம் மனோசக்தியை ஆன்மீக வழியில் வளர்த்துக்கொண்டால் அவற்றின் மீது நம்பிக்கை தானாகவே வந்து விடும்.

நாம் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் பணிவு என்ற பண்பாடு வேண்டும். பணிவு நம்மிடம் இருந்தால்தான் ரிஷிகள், முனிவர்கள் ,சாதுக்கள் கூறுவதை கவனமாக கேட்டு ஆன்மீக வழியில் நடப்பதற்கு ஆரம்பிப்போம். ஒருவரிடம் செல்வம் அதிகமாக இருந்தாலும், கல்வியில் சிறந்தவராக இருந்தாலும் தங்களை விட உலகில் செல்வந்தர்கள் இல்லை. தங்களைவிட கல்வியில் சிறந்தவர்கள் யாரும் இல்லை என்று நினைத்துக்கொண்டு கர்வத்துடன் மற்றவர்கள் கூறுவதை

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com

அலட்சியப்படுத்தி விடுவார்கள். அப்படிப்பட்ட எண்ணங்கள் உள்ளவர்களிடம் நம்பிக்கை என்னும் பண்பு எளிதில் வளர்வதில்லை. அதனால் அவர்கள் தங்களையும் அறியாமல் மன அமைதியை இழந்து தவிப்பார்கள். எனவே மனிதனுக்கு எந்த சூழ்நிலையில் இருந்தாலும் உயர்ந்தநிலை, தாழ்ந்த நிலையில் இருந்தாலும் கர்வம் என்பது இருக்கக்கூடாது. மனிதனுக்கு கர்வம் சிறிது இருந்தாலும் அதனை வளர விட்டுவிட க்கூடாது.

ஒருவர் சாதுவிடம் சென்று அலுவலகத்தில் ஒரே பணியினை நாள்தோறும் தான் செய்து கொண்டிருப்பதால் தனக்கு பணியில் ஒருவிதமான சலிப்புடன்கூடிய அலுப்புத் தட்டுகிறது. ஆனால் குடும்பத்தில் உள்ள தனது மனைவி மக்கள் அப்பா அம்மா போன்றவர்களுக்குச் செய்யக்கூடிய பணியானது அவ்வாறு தனக்கு சலிப்போ அலுப்போ ஏற்படுவதில்லை என்று கூறினார். அதற்கு மாறாக மிகுந்த சந்தோஷம்தான் தனக்கு ஏற்படுகிறது இது எதனால் என்று அந்த சாதுவிடம் விளக்கம் கேட்டார். அதற்கு அவர் 'நீ குடும்பத்தில் உள்ள உன்னோட நெருங்கிய உறவினர்களுக்கு விரும்பி சேவை செய்வதால் எவ்விதமான அலுப்போ சலிப்போ உனக்கு தெரிவதில்லை' என்று விளக்கம் கூறினார். எனவே உலகில் எந்தவொரு செயலும் சேவையும் நாம் விரும்பிச் செய்வதால் சலிப்போ கஷ்டங்களோ அதில் ஏற்படுவதில்லை என்பதை இதன் மூலம் உணர்ந்து கொள்ளலாம்.

உலகில் வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் இயலாதவர்களுக்கு செய்யக்கூடிய சேவையானது நமக்கு ஒருவிதமானமனபக்கு வதைக் கொடுக்கும். இதனை நாம் அனுபவபூர்வ மாக உணரலாம். மற்றவர்கள் மீது நம்பிக்கை கொள்வதால் என்ன பலன் நமக்குக் கிடைக்கும் என்று சிந்தித்துப் பார்த்தால், முதலில் அறிவுபூர்வ மான அனுபவபூர்வமாக ஞானம் கிடைக்கும். அதன் மூலம் வாழ்வில் நாம் விரும்பும் தேடும் மன அமைதி கிடைக்கும். ஒரு மனிதனுக்கு அனைத்து நற்பண்புகள் அவனை அறியாமல் கிடைக்கும்.

ஆனால் நம்பிக்கை என்னும் சிரத்தை இல்லை என்றால் ஞானம் அவர்களுக்கு ஒரு போதும் கிடைக்காது. மனிதனுக்கு பணிவு என்ற பண்பு இருந்தால் எல்லாரும் அவனை விரும்புவார்கள். மனிதனுக்கு நல்ல மன ஒழுக்கம் இருந்தால் அவர்கள் வாழ்வில் சந்தோசமாக இருப்பார்கள். மனக்கட்டுப்பாடு பொறுமை இருந்தால் வாழ்வில் மகிழ்வுடன் இருப்பார்கள். ஆனால் அவர்களுக்கு நம்பிக்கை என்ற பண்பு இல்லையென்றால் அவர்களுக்கு ஞானம் கிடைப்பதில்லை.

ஒருவருக்கு மற்றவர்கள் மீது நம்பிக்கை வருவதற்கு அறிவு வேண்டும். அதேபோல் பக்குவமான மனம் இருக்க வேண்டும். ஆனால் நம்பிக்கையின்மைக்கு அறிவும் மனபக்குவமோ தேவையில்லை. வாழ்க்கையில் பலவழிகளில் ஏமாற்றம் அடைந்து வாழ்வில் விரக்தி அடைந்து நம்பிக்கையில் நம்பிக்கை கொள்ளாமல் வாழ்வில் இருக்கக்கூடாது. எத்தனைமுறை ஏமாற்றம் அடைந்தாலும் மற்றவர்கள் மீது நம்பிக்கையை மட்டும் இழந்துவிடக்கூடாது என்ற மனபக்குவம் ஒவ்வொரு மனிதருக்கும் வரவேண்டும். நாம் கீழே விழுவது மீண்டும் எழுவதற்கு என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

வாழ்வில் நம்பிக்கையுடன் நற்பண்புகளுடன் வாழ்ந்தால் என்ன பலன் நமக்கு ஏற்படுகிறது என்று சிந்தித்துப் பார்த்தால், முதலில் ஞானம் வருவதற்கு வழிகாட்டுகிறது. மனக் குழப்பங்கள் மறைந்து நமக்கு மனதில் ஒரு தெளிவு பிறக்கிறது. மனதிற்கு அமைதி கிடைக்கிறது. இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யத் தோன்றுகிறது. யார் மீதும் பகைமை காட்டுவதற்கு மனம் இடம் கொடுப்பதில்லை. நாம் அனைவரும் விரும்பும் மனஅமைதி அப்போது நம்மையறியாமல் கிடைக்கிறது.

எடுத்தக்காட்டாக நாம் ஆன்மீகத்தில் ஈடுபடுவதற்கு தடையாக இருக்கும் நமது பணியினை நம்பிக்கையுடன் ஒருவரிடம் ஒப்படைத்து விடவேண்டும். அவ்வாறு ஒப்படைத்து விட்டால், அதன்பிறகு எந்தவிதமான மனக்கஷ்டம் உடல்கஷ்டங்கள் போன்றவை இல்லாமல் மனம் அமைதியுடன் இருக்கலாம் என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொள்ள முடியும். ஒருவருக்கு உலகில் உள்ள அனைத்துவிதமான நற்பண்புகள் இருந்தாலும் நம்பிக்கை என்னும் பண்பு ஒன்று மட்டும் இல்லையென்றல் அவன் .ஆன்மீகத்தில் முன்னேற்றம் காணமுடியாது. ஆனால் அவனிடம் இருக்கும் ஏனைய நற்பண்புகள் மூலம் நன்மைகள் பலன்கள் அவனுக்குக் கிடைக்கும். அதில் எவ்விதமான ஐயப்பாடும் இல்லை. ஆனால் அவன் விரும்பும் ஞானத்தினை மன அமைதியை மட்டும் அடையமுடியாது. மனிதனுக்கு நம்பிக்கைதான் வாழ்க்கை என்பதுபோல் நம்பிக்கைதான் ஞானத்திற்கு அவசியம் என்பதை ஆன்மீகத்தை நாடுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதனை நன்கு புரிந்துகொண்டு ஆன்மீக வழியில் செயல்படும்போது அவன் விரும்பும் தேடும் மன அமைதி அவனையும் அறியாமல் கிடைக்கும்.

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com




GET IT ON Google Play